விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 04 சனிக்கிழமை (19.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 366

# விரிவடைகின்றது மருதனார்மடம் கொத்தணி

## திருநெல்வேலி சோதனை; ஒருவருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி சந்தையில் வைத்து பெறப்பட்ட மாதிரியின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட நபர், மருதனார்மடம் வர்த்தக நிலையம் ஒன்றில் பணியாற்றுபவர் என்று சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.
அதனால் மருதனார்மடம் 19

## உடுவில் பெண்கள் இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
மருதனார் மடம் கொரோனா கொத்தணியில் உடுவிலைச் சேர்ந்த இரு பெண்களுக்கு வைரஸ தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது,
மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரிகளுடன் நேரடித் தொடர்புடைய 47 மற்றும் 21 வயதுடைய பெண்கள் 19

## சுன்னாகத்தில் ஒருவருக்கு கொரோனா வைரஸ்

(யாழ்ப்பாணம்)
மருதனார் மடம் கொரோனா கொத்தணியில் சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப் 19

### மருதனார்மடம் கொரோனா கொத்தணிக்கு

# போதைப்பொருள் கடத்தலா காரணம்?

## பொலிஸ் விசாரணைகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
மருதனார்மடம் கொரோனா வைரஸ் கொத்தணிக்கு கொழும்பிலிருந்து போதைப்பொருள் கடத்தி வரும் நடவடிக்கையே காரணம் என்று நம்பப்படுகிறது.
அதனால் அது தொடர்பில் முறையான விசாரணையை பொலிஸார் ஊடாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட சிலர் தற்போது சிகிச்சை பெற்று வரும் நிலையில், அவர்கள் வீடு திரும்பியதும் விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
(19ஆம் பக்கம் பார்க்க)

வலம்புரிக்கு
அகவை 21
அன்பு வாசகர்களே!
நாளை 20ஆம் திகதி
உங்கள் வலம்புரிக்கு
அகவை 21 என்பதை
மன மகிழ்வோடு
தெரிவித்துக் கொள்கின்றோம்.
வலம்புரிக் குடும்பம்

## கொரோனா 2 ஆவது அலையால்

### யாழ்ப்பாணத்தில் 100 பேர் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
நாட்டில் ஒக்ரோபர் 4ஆம் திகதி ஏற்பட்ட கொரோனா வைரஸ் 19

## கொரோனாவுக்கு 45 நாட்களேயான குழந்தை பலி

(கொழும்பு)
கொரோனாத் தொற்றுக்கு உள்ளான 45 நாட்களேயான பச்சிளங் 19

## மிக வீரியமாக கொரோனா பரவுகின்றது அடுத்த வாரம் இலங்கைக்கு முக்கியமானது

### தொற்று நோயியல் பிரிவு எச்சரிக்கை

(கொழும்பு)
மிக வீரியமாக கொரோனா வைரஸ் இலங்கையில் பரவி வருகின்றது.
கொரோனா பரவுவதை கருத்தில் கொண்டு வரும் வாரம் இலங்கைக்கு மிக முக்கியமானது என தொற்று நோயியல் பிரிவு எச்சரித்துள் 19



## வடக்கு மீனவர்களின் பிரச்சினை; இந்தியாவுடன் இம்மாதம் பேச்சு

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)
இந்திய மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்கும் முகமாக எதிர்வரும் 30ஆம் திகதி இலங்கை மற்றும் இந்தியா இடையில் பேச்சு 19

## 800 வருடங்களின் பின் வானில் அதிசயம்

### வியாழன் மற்றும் சனி கிரகங்கள் இன்று ஒன்று சேரவுள்ளன

(கொழும்பு)
இன்று இரவு வானத்தில் விசேட கிரகங்கள் ஒன்றுசேர்வதை கண்டு கொள்ள 19

## ஊழல் குற்றச்சாட்டு போக்குவரத்து திணைக்களத்தின் 600 ஊழியர்களுக்கு இடமாற்றம்

12ஆம் பக்கம் பார்க்க

## கோவிட் - 19 தொற்று நாட்டில் மேலும் ஐவர் பலி

### உயிரிழப்பு 165 ஆக உயர்வு

### நேற்றும் +660 பேர் பாதிப்பு

(கொழும்பு)
நாட்டில் கோவிட் - 19 நோயால் மேலும் 5 பேர் உயிரிழந்துள்ள 19

### கொரோனாத் தொற்றாளருடன்

## புகைப்படம் எடுத்த சுகாதார ஊழியர்

### தனிமைப்படுத்தப்பட்டார்

12ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# போக்குவரத்து பயணங்களை முடிந்தவரை கட்டுப்படுத்துங்கள்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் கோரிக்கை

(கொழும்பு)

இந்த வார இறுதியில் பயண த்தை முடிந்தவரை கட்டுப்படுத் துமாறு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன பொது மக்களிடம் கேட்டுக்கொண்டார்.

கொரோனா இரண்டாவது அலை தொடங்கியதிலிருந்து அதிக எண்ணிக்கையிலான வழக்குகள் கொழும்பு மாவட் டத்தில் இருந்து பதிவாகியு ள்ளன.

அந்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 365 ஆக உள்ளது. அந்த காலகட்டத்தில் கம்பஹா மாவட்டத்தில் இருந்து 8,004 பாதிக்கப்பட்டவர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்

மேலும் 2,284 பாதிக்கப் பட்டவர்கள் களுத்துறை மாவட் டத்தில் இருந்து அடையாளம் காணப்பட்டுள்ளனர். மேலும், அந்த காலக்கட்டத்தில் கண்டி மாவட்டத்தில் இருந்து 1,227 பாதிக்கப்பட்ட நபர்கள் அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று ஊடகங்களுடன் பேசிய அரசு மருத்துவ அதிகா ரிகள் சங்கத்தின் ஆசிரியர் டாக்டர் ஹரித அலுத்கே, மேல் மாகாணத்தில் கொரோனா வின் ஆபத்து குறைந்துள்ள நிலையில், மற்ற மாகாணங் களில் கொரோனா ஆபத்து அதிகரித்துள்ளது என்று கூறி னார். (ம-03)

# உரும்பிராயில் 17 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ். திருநெல்வேலி சந் தையில் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நபரினால் உரும்பிராயில் 17 குடும்பங்களை சேர்ந்த 70இற் கும் மேற்பட்டவர்கள் தனிமைப் படுத்தப்பட்டிருக்கின்றனர்.

குறித்த தொற்றாளர் உரும் பிராயில் உள்ள மருத்துவர் ஒருவர் தனது வீட்டில் நடத் திவரும் கிளினிக்கிற்கும் சென் றுவந்த நிலையில் மருத்து வரின் குடும்பம் உட்பட 17 குடும்பங்கள் இவ்வாறு தனி மைப்படுத்தப்பட்டிருக்கின்ற னர்.

மேலும் குறித்த நபருக்கு மருதனார்மடத்திலும் வர்த்தக நிலையம் ஒன்று உள்ளதாக கூறப்படுகின்றது. (ம-03)

# திருநெல்வேலி சந்தையின் வெளிப்பகுதியில் குவிந்த வியாபாரிகள், பொதுமக்கள்

## வியாபாரத்துக்கு தடைவிதித்த கோப்பாய் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சந்தையின் வெளிப்பகுதியில் நேற்று வியா பாரிகள் சந்தை நடவடிக்கை யில் ஈடுபட்டனர். பொது மக்க ளும் அதிகளவில் கூடியதனால் அங்கு விரைந்த கோப்பாய் பொலிஸார் வியாபாரத்துக்கு தடை விதித்தனர்.

கொரோனாத் தொற்று நிலை மையில் வடக்கு மாகாணத் திலுள்ள அனைத்துப் பொதுச் சந்தைகளும் மறு அறிவித்தல் வரை மூடப்படும் என வடமா காண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ் வரன் அறிவித்துள்ள நிலை யில் யாழிலுள்ள அனைத்துப் பொதுச் சந்தைகளும் நேற் றைய தினம் மூடப்பட்டது.

இந்நிலையில் யாழ். மாவ ட்டத்தின் முக்கிய பொதுச் சந் தையான திருநெல்வேலிப் பொதுச் சந்தையும் மூடப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் சந்தை வியாபாரிகள் நேற்று அதிகாலை முதல் சந்தையுடன் இணைந்த வகையில் அமைந்துள்ள சந்தை வெளிப்புறக் கடைகள் உள் ளிட்ட கட்டடத் தொகுதியில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். மேற்படி பகுதியில் வியாபார நடவடிக்கைகள் இடம் பெற்றமையால் வியாபாரிக ளும், மக்களும் அதிகளவில் ஒன்றுகூடினர். இந்நிலை யில் அப்பகுதிக்கு வந்த கோப்பா ய்ப் பொலிஸார் குறித்த பகுதி யில் வியாபார நடவடிக்கை களில் ஈடுபடத் தடை விதித் தனர்.

கோப்பாய்ப் பொலிஸார் மேற் கொண்ட நடவடிக்கையால் அனைத்துக் கடைகளும் நேற் றுக் காலை முதல் மூடப்பட்டன.

எனினும், அதனையும் மீறிச் சந்தை வளாகத்தினுள் கடை யொன்று திறக்கப்பட்டு வியா பார நடவடிக்கைகள் முன்னெ டுக்கப்பட்டதுடன் வெளிப் பகுதி யிலும் சில கடைகள் திறக் கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-03,18)

## இலங்கை கடற்படையை கண்டித்து

# இராமேஸ்வர மீனவர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

(இராமேஸ்வரம்)

இலங்கை கடற்படையினரை கண்டித்து இராமேஸ்வரம் மீன வர்கள் நடத்திவரும் தொடர் வேலைநிறுத்தம் நீடிப்பு, மீனவர்களை விடுவிக்க வலி யுறுத்திவரும்திங்கட்கிழமை இராமேஸ்வரம் பேருந்து நிலையம் முன்பு விசைப்படகு மீனவர்கள் மற்றும் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் கண்டண ஆர்பாட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

இலங்கை கடற்படையால் கைதான மீனவர்களையும் பறிமுதல் செய்த படகுகளையும் விடுவிக்க வலியுறுத்திராமேஸ் வரம் மீனவர்கள் நேற்று முன் தினம் வேலை நிறுத்த போராட் டத்தை தொடங்கினர். இத னால் 600 க்கும் மேற்பட்ட பெரிய படகுகள் கடலுக்குச் செல்லாமல் ராமேஸ்வரம் மீன் பிடித் துறைமுகத்தில் நிறுத்தப் பட்டுள்ளன.

இராமேஸ்வரம் விசைப் படகு மீனவர்களின் தொடர் வேலை நிறுத்த போராட்டம் காரணமாக இராமேஸ்வரத்தில் 600 விசைப்படகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டு ள்ளது. சுமார் 15 ஆயிரம் மீன வர்களும் 20 ஆயிரம் மீன்பிடி சார்பு தொழிலாளர்களும் பாதிக் கப்பட்டுள்ளனர். (ம-03,281)

## கொழும்பு துறைமுக நகரத்திற்குள்

# பாரிய முதலீட்டை மேற்கொண்டது சீனா

(கொழும்பு)

சர்வதேச நிதி நிலைய த்தை அமைக்கும் அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக சீன துறை முக பொறியியல் கம்பனி உள் ளிட்ட நிறுவனங்கள் இலங் கையில் ஒரு பில்லியன் அமெ ரிக்க டொலர் நிதியை முதலீடு செய்துள்ளன.

கொழும்பு துறைமுக நகரத் திற்குள் மேற்கொள்ளப்படும் முதலாவது முதலீடு இதுவா கும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் ஷீ ஜென் ஹொங் ஆகியோர் முன்னிலையில் பிரவுன்ஸ் இன்வெஸ்ட்மென ட்ஸ், எல்.ஓ.எல்.சி குழுமத்தின் தொழில்நுட்ப முதலீட்டு வலை யமைப்பு, சீன துறைமுக பொறி யியல் கம்பனி (சைனா ஹார்பர் என்ஜினியரிங் கம்பனி லிமி டெட்) ஆகிய நிறுவனங்கள் நேற்று முன்தினம் மேற்படி முதலீட்டுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன.

இதன்போது, கருத்து வெளி யிட்ட பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, "வெளிநாட்டு நேரடி முதலீ டுகளை அதிகரிப்பதற்கு எமது அரசாங்கம் முன்னுரிமையளி த்து வருகின்றது. அந்தவகை யில் இலங்கை மீண்டும் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து விட்டது என்பதைக் காணபிக் கும் ஒரு முக்கிய செயற்திட்டமே இதுவாகும்.

எமது நாட்டின் அமைவிடம் மற்றும் எம்மிடமுள்ள வளங்க ளைப் பயன்படுத்தி மேற்கொள் ளக்கூடிய திட்டங்களில் முத லீடு செய்வதற்கு முன்வருமாறு நாம் சர்வதேச முதலீட்டா ளர்களுக்கு அழைப்பு விடுக் கின்றோம்" என்று தெரிவி த்தார். (ம-03)

# மரண அறிவித்தல்


## செல்வராசா அரைவிந்தன்

ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்ட செல்வராசா அரைவிந்தன் நேற்று முன்தினம் (17.12.2020) வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகக் கொண்ட செல்வராசா-மனோன்மணி தம்பதியரின் ஏக புதல்வனும் சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற சிற்றம்பலம் மற்றும் இராசேஸ்வரி (கிளி) தம்பதியரின் பாசமிகு மருமகனும் பிறேமலதாவின் அன்புக் கணவரும் தருண், றிசீவன், அஸ்யா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(C-937)




பிறப்பு - 03.08.1972
இறப்பு - 17.12.2020

சுரணவாய் தெற்கு. 076 625 5905

தகவல்:-
நாகலிங்கம் மதிமாறன்

# கண்ணீர் அஞ்சலி



கிளிநொச்சி தட்டுவன்கொட்டி கண்ணகை அம்மன் வித்தியாலய முன்னாள் அதிபர் திருமதி **தயாநிதி கணேசலிங்கம்** அவர்களது அன்புக் கணவர்

**அமரர்**

## டேயரட்ணம் கணேசலிங்கம்

அவர்கள் இறைபதமடைந்தமையையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள் சங்கம்,
கிளிநொச்சி மாவட்டம்.

(C-940)

# மு/வள்ளிபுனம் மகா வித்தியாலயம்
# பாராட்டி வாழ்த்துகின்றோம்

2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்து வாழ்த்துகின்றோம்.



மா.சுலக்சிகா - 186, த.ஷதுர்சிகா - 179, ஜெ.அபிசாளினி - 178, செ.லதுர்சன் - 176, யோ.சுகிர்தனா - 172, ச.ஹினுஜன் - 170, க.சசிகரன் - 169, ம.வகீதன் - 167, க.டர்சனா - 166, ச.யசோதா - 165, ர.திலக்ஷன் - 164, ரா.அபிஷன் - 161, த.சந்தோஷ் - 161, ச.ஜனுசிகா - 160.



2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவித்து வாழ்த்துகின்றோம்.



த.டிலைக்சன் - 157, றோ.மேர்சி - 157, ச.கிசோப்பிக்கா - 156, கோ.காவியன் - 153, வி.அபிசா - 151, சி.யதுஸ்ணவி - 148, ஹீ.அனோலின் ஜெனீபா-146, அ.தனஞ்சயன் - 143, பி.பிரசன்னா - 141, நி.பமிலன் - 140, சா.யதுர்சன் - 140, வி.இசைப்பிரியா - 139, த.டிலான் - 138, த.ருக்சன் - 136, சு.சர்மிகா - 136, ஒ.கபிலன் - 135, ச.யாழ்விழி - 132, சி.பிருந்திகா - 131, சு.சன்சியா - 130, சி.பிரிந்தா - 129, மு.சஞ்சீவன் - 129, பு.கவிசன் - 127, வி.தர்மிலன் - 126, ர.ருசாந்தன் - 125, ம.கிசானா - 125, சி.யதுர்சன் - 124, க.டினோஜன் - 123, ம.மிதுசாந் - 120, ம.மிதுஷா - 118, மு.தர்சிகன் - 118, ஜெ.நிதன் - 117, க.தனுசிகா - 115, பா.ஜெனனி - 114, ஜோ.ஜெஸ்மின் - 109, வ.அனுசியா - 109, நி.நிம்சி - 107, சு.டிலைக்சன் -107, தி.தீபிகா - 107




2020 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்களைக் கௌரவித்து வாழ்த்துகின்றோம்.



பி.லினுஜா - 96, உ.அனுஸ்ரன் - 95, யூ.றொக்சி - 95, அ.ருக்சன் - 93, செ.சமரசன் - 91, செ.வின்சிகா - 87, வி.சாரங்கன் - 85, கு.தர்மிகன் - 85, கி.றெஜிதா - 83, ந.குயிலன் - 82, வி.நிதுஷா - 80, வி.விதுர்சன் - 79, ச.சதுர்சன் - 76, வி.திலக்சிகா - 74, பா.வைசாளினி - 72.

**வாழ்த்துவோர்:**
**பாடசாலைச் சமூகம்,**
**மு/வள்ளிபுனம்**
**மகா வித்தியாலயம்.**

(4987)


# பிறக்கின்ற குழந்தைகளுக்கு கொரோனா எதிர்ப்பு சக்தி

## ஆய்வில் தகவல்

(சிங்கப்பூர்)

கொவிட்-19 வைரஸ் தொற்றுக்குள்ளாகும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு பிறக்கின்ற குழந்தைகளுக்கு கொரோனா எதிர்ப்பு சக்தி காணப்படுவதாக சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் கண்டறியப்பட்டுள்ளது.

கொவிட்- 19 வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுகின்ற கர்ப்பிணி தாய்மார்களை கொரோனா வைரஸ் தொற்று கடுமையாக தாக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்திருந்தது.

எனினும் பிரசவத்தின் போது குழந்தைகளுக்கு குறித்த தொற்று பரவும் என நிரூபிக்கப்படவில்லை.

இந்நிலையில் சிங்கப்பூரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றிற்கமைய பிறக்கும் குழந்தைகளுக்கு குறித்த நோயை எதிர்ப்பதற்கான சக்தி அதிகரித்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் பிறக்கும் குழந்தைகளின் நிலைமைய தீவிரமாக கண்காணிக்க வேண்டியது அவசியம் என வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ஜ-4)

# எம்.சி.சி.ஒப்பந்தத்தை எப்போதோ தூக்கி எறிந்து விட்டோம்

## பதில் கொடுத்துள்ள அமைச்சர்



(கொழும்பு)

எம்.சி.சி. உடன் படிக்கையை நாங்கள் பல மாதங்களிற்கு முன்னரே நிராகரித்து விட்டோம் என அமைச்சரவை பேச்சாளர்களில் ஒருவரான ரமேஸ் பத்திரன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் எம்.சி.சி உடன் படிக்கையிலிருந்து இலங்கையின் பெயர் நீக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தகவல் வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பேசிய அவர், எம்.சி.சி உடன்படிக்கை குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நால்வர் கொண்ட குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தவுடன் நாங்கள் அதனை நிராகரித்துவிட்டோம்.

நிபுணர் குழு தனது பரிந்துரையில் எம்.சி.சி. உடன்படிக்கை இலங்கைக்கு பொருத்தமானதில்லை என தெரிவித்தது.

நாங்கள் எம்.சி.சி உடன் படிக்கையில் காணப்படுகின்ற அம்சங்கள் குறித்து பேச்சுவார்த்தைகளை கூட மேற்கொள்ளவில்லை, அதில் மாற்றங்களை கோரவில்லை. நாங்கள் நேரடியாக அதனை நிராகரித்துவிட்டோம்.

அதனால் நாங்கள் தொடர்ந்தும் எம்.சி.சி உடன்படிக்கையை முன்னெடுக்க விரும்ப வில்லை, எங்களிற்கு அது தேவையில்லை என அதிகாரிகளிற்கு தெரிவித்தோம் என்றார். (ஜ-4)

# குணமடைந்தோர் 26,353

(கொழும்பு)

நாட்டில் நேற்று மேலும் 708 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

அதன்படி, கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 26,353 ஆக உயர்வடைந்துள்ளனர்.

இதேவேளை, 35,387 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதில் 8,312 பேர் வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்துடன் 467 பேர் கொரோனாத் தொற்று சந்தேக த்தில் வைத்திய கண்காணிப்பில் உள்ளனர்.

நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளான 160 பேர் இது வரை உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

# காரைதீவில் பதற்றம்; இராணுவம் குவிப்பு

(காரைதீவு)

காரைதீவு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மாளிகைக் காடு பிரதான வீதியில் கட்டடத்தின் ஒரு பகுதி சட்ட விரோதமாக நிர்மாணிக்கப்பட்டதால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அகற்றும் போது பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

குறித்த கட்டடம் காணிக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான பகுதியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் இதை அகற்ற வந்த அதிகார சபை உத்தியோகத்தர்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இதனால் பிரதான வீதியில் பொதுமக்கள் கூடியதுடன் சுகாதார நெருக்கடி ஏற்பட்டது. இதனை அறிந்து காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஜீவராணி சிவசுப்பிரமணியம் களத்துக்கு நேரில் வந்து சுகாதார நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி னார்.

கட்டட நடத்துநர் வைத்திய அதிகாரியை திட்டி வெளியேறுமாறு கூறினார். இதை அடுத்து பதற்ற நிலை ஏற்பட்டதை தொடர்ந்து பொலிஸ், இராணுவம் ஆகியோர் வரவழைக்கப்பட்டு நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள் சட்ட விரோத கட்டடத்தை உடைத்து அகற்றினர். (ஜ-4)

# இலங்கை-பாகிஸ்தான் 6 ஆவது சுற்றுப்பேச்சு



(கொழும்பு)
பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான வெளியுறவு செயலாளர் மட்ட இருதரப்பு அரசியல் ஆலோசனைகளின் (BPC) 6 ஆவது சுற்று கடந்த 16 ஆம் திகதி இணைய வழியில் நடைபெற்றது.

வெளியுறவு செயலாளர் சோஹைல் மஹ்மூத் பாகிஸ்தான் தரப்புக்கு தலைமை தாங்கியதோடு இலங்கை தரப்பு சார்பாக வெளியுறவு செயலாளர் அட்மிரல் (பேராசிரியர்) ஜெயநாத் கொலம்பகே தலைமை தாங்கினார்.

இதன்போது, அரசியல், பொருளாதார, பாதுகாப்பு, வர்த்தகம் மற்றும் முதலீடு, கலாசாரம் மற்றும் கல்வித் துறைகள் மற்றும் மக்கள் தொடர்பு பரிமாற்றல்கள் ஆகிய விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

1948 இல் இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதிலிருந்து, பாகிஸ்தானும் இலங்கையும் நம்பிக்கை, பரஸ்பர மரியாதை மற்றும் நெருக்கமான ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நல்லுறவைப் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# மேல் மாகாணத்திற்கு வெளியே கொரோனா பரவும் அபாயம்




(கொழும்பு)
மேல் மாகாணத்திற்கு அப்பால் கொரோனா பரவுவதற்கான ஆபத்து உள்ளது, இது எப்போதும் எதிர் பார்க்கப்படும் ஒரு நிகழ்வு என தலைமை தொற்று நோயியல் நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணத்தில் மையப்பகுதிகளுக்கு வெளியே கொரோனா பரவு வதற்கான அபாயத்தை நாடு எதிர்கொள்கிறதா? என்ற கேள்விக்கு பதிலளிக்கும்போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

தொடர்புத் தடமறிதல், சோதனை மற்றும் தனிமைப்படுத்துதல் போன்ற வழக்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதன் மூலமே நோயைக் கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# நிலந்தவின் தொலைபேசியிலிருந்த ஆவணங்கள் அழிப்பு

(கொழும்பு)
அரச புனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவின் தொலைபேசியில் இருந்த ஆவணங்கள் மீளப் பெற முடியாதவண்ணம் அழிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட தடயவியல் சோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் தடயவியல் சோதனையை மேற்கொண்ட குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் டிஜிற்றல் தடயவியல் ஆய்வுக்கூடத்தின் பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் சம்பத் அமரகுமார, ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் சாட்சியமளித்துள்ளார்.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய ஏதேனும் தடயங்கள் காணப்படுகின்றனவா? என்பது குறித்து ஆராய்ந்தபோது, நிலந்த ஜயவர்தனவின் தொலைபேசியில் Factory Reset செய்யப்பட்டுள்ளமையால், எவ்வித தடயங்களையும் பெற முடியவில்லை என பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் சம்பத் அமரகுமார தெரிவித்துள்ளார்.

அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தனவினால் பயன்படுத்தப்பட்ட கையடக்கத்தொலைபேசி மற்றும் மடிக்கணனியில் ஏப்ரல் 21 தாக்குதல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் விசாரணைகளுக்கு தேவையான தரவுகள் உள்ளனவா? என்பது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி ஆணைக்குழு ஏற்கனவே பணிப்புரை விடுத்திருந்தது.

இந்த பணிப்புரைக்கு அமைய, நிலந்த ஜயவர்தனவின் கையடக்கத் தொலைபேசியும் மடிக்கணனியும் தடயவியல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதாக பிரதம பொலிஸ் இன்ஸ்பெக்டர் சம்பத் அமரகுமார மேலும் சாட்சியமளித்துள்ளார். (ஜ-4)

# பாரிய இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை கட்டுநாயக்கவில்

## அவமானம் என்கின்றார் தேரர்

(கொழும்பு)
அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் கட்டுநாயக்கவில் ஒரு பாரிய இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை திறக்கப்பட்டுள்ளமை, நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் என்று விமர்சிக்கப்பட்டுள்ளது.

தேசிய புத்திஜீவிகள் சபையின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் இந்த விமர்சனத்தை தெரிவித்துள்ளார்.

உலகின் இறைச்சி உற்பத்தியில் சுமார் 10 வீதப் பங்கை இந்த இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை பூர்த்தி செய்ய முடியும் என தகவல்கள் வெளியாகியுள்ளதாக அவர் செய்தியாளர்கள் மத்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலை குறித்து அரசாங்கம் அதிகாரபூர்வமாக ஒரு அறிவிப்பையும் வெளியிடவில்லை.

எனினும் இது யாருடைய தொழிற்சாலை என்பதை அறிந்து கொள்வதற்கு நாட்டின் பொதுமக்களுக்கு உரிமை உண்டு என்று சோபித தேரர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் இந்த தொழிற்சாலையை நிறுவுவதன் நோக்கம் என்ன என்றும் அவர் வினவியுள்ளார்.

இந்த விடயத்தில் நாட்டிற்கு ஏற்படக்கூடிய சுற்றுச் சூழல் மற்றும் நெறிமுறை தாக்கத்தை அரசாங்கம் கருத்தில் கொள்ள வேண்டும்.

இதுபோன்ற விலங்குகளை அறுக்கும் செயற்பாட்டின் மூலம் நாடு அவமானத்தை எதிர்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் கட்டுநாயக்க இறைச்சி பதப்படுத்தும் தொழிற்சாலையின் மூலம் உலகில் மிக அதிகமாக விலங்குகளை படுகொலை செய்யும் நாடாக இலங்கையின் பெயர் பதிவு பெறும் என்று சோபித தேரர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# அரசை வீட்டிற்கு அனுப்ப முன்னின்று செயற்படுவேன்

## தேரர் எச்சரிக்கை

(கொழும்பு)
ஒவ்வொரு நபர்கள் கனிகளை பறித்துக்கொள்ளவும் தமது மடியை நிரப்பிக் கொள்ளவும் தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வரவில்லை என்று முருத்தெட்டுவே ஆனந்த தேரர் எச்சரித்துள்ளார்.

தற்போதைய நிலவரம் தொடர்பில் அவர் பேசியதாவது,

சுகாதாரத்துறை தற்போது முற்றாக செயலிழந்துள்ளது. சுகாதார அமைச்சும், அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சியும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் கைப்பாவையாக மாறியுள்ளனர்.

நாடு முழுவதும் மருத்துவர்களுக்கு தட்டுப்பாடு நிலவும் போது, தகுதியான 70க்கும் மேற்பட்ட மருத்துவர்கள் சுகாதார அமைச்சுக்குள் இருக்கின்றனர்.

அடுத்த 72 மணி நேரத்திற்குள் நிர்வாக நடவடிக்கைகளுக்கு தேவையான மருத்துவர்களை தவிர ஏனைய மருத்துவர்களை அமைச்சில் இருந்து நீக்கி, அவர்களை வைத்தியசாலைகளுக்கு நியமிக்க வேண்டும். அப்படி முடியாது என்றால், சுகாதார துறையின் ஏனைய தொழிற்சங்கங்களை சேர்ந்தவர்கள் அமைச்சின் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டும். அப்படியில்லை என்றால் தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர தலையீடுகளை மேற்கொண்டது போல, வீட்டுக்கு அனுப்பவும் முன்னின்று செயற்படுவேன் என தெரிவித்துள்ளார். (ஜ-4)

# எம்.சி.சி. எந்தப் பெயரில் வந்தாலும் கைச்சாத்திடப்படாது

## அமரவீர திட்டவட்டம்



(கொழும்பு)
அமெரிக்காவுடனான எம்.சி.சி. உடன்படிக்கை வேறு பெயரில் வந்தால்கூட அதில் இலங்கை கைச்சாத்திடாது. நாட்டுக்கு நன்மை பயக்கக் கூடிய விடயங்களை மட்டுமே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் செய்யும் என அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

"உஸ்ம தெனதுரு" 20 இலட்சம் மரநடுகை வேலைத் திட்டத்தின் கீழ் அமைச்சர் மகிந்த அமரவீர தலைமையில் காசல்றீ நீர்த்தேக்கப் பகுதிக்கு அண்மித்த லைதண்டி தோட்டத்தில் மரக்கன்றுகள் நேற்று நாட்டப்பட்டன.

இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் தெரிவிக்கையில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,


எம்.சி.சி. உடன்படிக்கை இனி கைச்சாத்திடப்படாது. அதிலிருந்து அமெரிக்காவும் விலகி விட்டது. எம்.சி.சி. உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது எனக் கூறியே இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. அந்த கொள்கை தொடர்ந்தும் பின்பற்றப்படும். வேறு வடிவில், வேறு பெயரில் வந்தால் கூட ஏற்பதற்கு தயாரில்லை.

எது எப்படியிருந்தாலும் அமெரிக்காவுடனான எமது இராஜதந்திர உறவுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அது அவ்வாறே தொடரும். அமெரிக்காவும் இதனை அறிவித்துள்ளது. (ஜ-4)

# தோட்டத் தொழிலாளர்கள் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும் - இரா.சாணக்கியன்

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவுள்ள தோட்டத் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப்பட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.



நேற்று வெள்ளிக்கிழமை மலையகத்திற்கு விஜயம் செய்திருந்த நிலையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில விசேட கோரிக்கைகளுக்கு அமைவாக பலரை சந்தித்து பேசினேன்.

பல பிரச்சினைகளை எனது கவனத்துக்கு கொண்டு வந்தனர். அதில் மிகவும் பிரதான பிரச்சினையானது எமது நாட்டின் பிரதான ஏற்றுமதிப் பொருளான தேயிலை உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை ஆகும்.

தற்போதைய அரசாங்கமானது மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதாக உத்தரவாதம் அளித்துள்ளது.

ஆனால் தொழிலாளர்களின் தற்போதைய கூற்றுப்படி மாதத்திற்கு 10,000 தொடக்கம் 12,000 கிடைப்பதாக சொல்கின்றனர்.

அதுவும் 26 வேலை நாட்களுக்குரிய தொகையாக இதனை வழங்குகின்றனர். இதனடிப்படையில் ஒருவரின் நாள் வருமானமானது 500 ரூபாய்க்கு குறைவாகவே காணப்படுகின்றது.

அதிலும் சில கழிவுகளை கழித்துவிட்டுத்தான் சம்பளத்தினை வழங்குகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளை அரசாங்கம் முக்கியமாக கவனித்து, அவர்களுக்கு உரிய சரியான சம்பளத்தை உறுதி அளித்தது போன்று மிக விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது நாட்டின் மிக முக்கிய அடையாளங்களில் ஒன்று எமது தேயிலை ஆகும். அத்துடன் உலக சந்தையில் இலங்கை தேயிலைக்குரிய மதிப்பு மிக அதிகமாகும்.

இவற்றுக்கு பல தலைமுறைகளாக பெரும் பங்காற்றும் தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் கட்டாயம் உயர்த்தப்பட வேண்டும்" என மேலும் கேட்டுக் கொண்டார். (ஜ-4)

# "ப்ளூ ஓசன்" வழக்கு மார்ச்சில்

(கொழும்பு)

நிதி மோசடி தொடர்பில் Blue Ocean Breeze மற்றும் Blue Ocean Reality ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று முன்தினம் கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கொழும்பில் நிர்மாணிக்கப்படும் சொகுசு தொடர்மாடிக் குடியிருப்பில் வீடுகளை வழங்குவதாகத் தெரிவித்து மக்களிடம் 270 மில்லியன் ரூபாவை பெற்று இணங்கிய கால எல்லையில் அந்த சொத்துக்களை அவர்களுக்கு வழங்காமையினால் 270 மில்லியன் ரூபா நிதி மோசடி செய்துள்ளதாக Blue Ocean Breeze மற்றும் Blue Ocean Reality ஆகிய இரண்டு நிறுவனங்களுக்கும் எதிராக வீட்டை கொள்வனவு செய்யவிருந்த ஒருவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

நேற்று முன்தினம் பேசித் தீர்ப்பதற்காக வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதும், பிரதிவாதிகள் அதற்கு இணங்காமையால், விசாரணை வேறொரு நாளுக்கு மாற்றப்பட்ட தாக முறைப்பாட்டுத் தரப்பு சட்டத்தரணி அஷான் நவரத்ன பண்டார தெரிவித்தார்.

பிரதிவாதிகள் அடிப்படை ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளதுடன், அது தொடர்பில் பிரதிவாதிகளும் முறைப்பாட்டாளர்களும் எழுத்து மூலம் சமர்ப்பித்த பின்னர் அடுத்த வருடம் மார்ச் 16 ஆம் திகதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக அவர் கூறினார். (ஜ-4)

# சடலம் மீட்பு

(கொழும்பு)

நாவல - சேனாநாயக்க மாவத்தை பகுதியில் இருந்து பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

ராஜகிரியவை சேர்ந்த 62 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெலிக்கடை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தங்கவேலாயுதம் பரமேஸ்வரி**

(கமலா)

அமைதியான தனிமைக்கும்
தனிமையான அமைதிக்கும் இடையில்
மௌனித்திருக்கும் இத்தெருவில்
தொடர்ச்சியாக இசைக்கும்
பழகிப்போன ஒரே இராகம்.

ஒப்பாரிகளும் ஓலங்களும் சூழ
தொடர் பாடைகள் கனவுக்குள்
மெதுவாய்... மெதுவாய்...
ஊர்வலம் போகின்றன.

பெரும் தாய்மை உறங்கும் கல்லறையில்
இறுப்போய் ஊமையாய் கிடக்கும்
மலர்வளையங்கள் மறுபடியும்
அழுகிறதோ இல்லையோ...

பூட்டிய மனவறைக்குள்
நாட்செல்ல நாட்செல்ல
இனம்தெரியாப் பயஉணர்வு
சிலந்தி வலைகளை
சிறைச்சாலைக் கம்பிகள் போல்
சர்வாதிகாரமாய் நிறுவும் போதும்,

இருண்டுபோன இதயச்சுவரில்
நாட்செல்ல நாட்செல்ல
அடிமுடி அறியா அவலங்கள்
அகலக்கால் பதித்து ஓங்கி அறையும் போதும்,

தோற்கடிக்கப்பட்ட மனிதத்தின் நடுவில்
மனக்குமுறல் கொண்ட குருவிக்கூட்டம்
தொடர்ந்து அழுகின்றது
அகண்ட பெருங்கூட்டின்
தாய்ப்பறவையின் பிரிவை எண்ணி...!

தோற்றம்
01.05.1953

மறைவு
19.12.2016

யாழ்ப்பாணம்
குடத்தனை
பொற்பதி

என்றும் நீங்கா நினைவுகளுடன்...
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4971)

## வீதி மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதித்திருத்த வேலை காரணமாக வடமராட்சி மாலி சந்தியிலிருந்து நாவலடி சந்தி வரையான வீதி மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த வீதியால் பயணிக்கும் மக்கள் மாற்று வழியாக தம்பசெட்டி வீதியைப் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (5-4-60)



**நடைபெற்று முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த காரைநகர் மெய்கண்டான் வித்தியாலயத்தில் கல்வி பயினும் இரண்டு மாணவர்களுக்கு ரட்ணம் அறக்கட்டளை நிறுவுநர் கலாநிதி ஆர்.நித்தியானந்தன் கைக் கணனிகளை வழங்கி வைத்தார்.**

# பயிர்களைப் பாதுகாக்க

## மதகுகள் அமைக்க மக்கள் கோரிக்கை



(சாவகச்சேரி)

தென்மராட்சி-அல்லாரைப் பகுதியில் பாலம் அமைத்து நெற் பயிர் அழிவைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதனிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் அல்லாரைப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே கிராம மக்கள் இக்கோரிக்கையை முன்வைத்தனர்.

இது தொடர்பாக அப்பகுதி கிராம மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கெற்பேலி, கச்சாய், அல்லாரைப் பகுதிகளில் உள்ள குளங்கள் மாரி காலத்தில் நிறைந்து மேலதிக நீர் கச்சாய் கடலுக்கு செல்வது வழமை.

ஆனால் வாய்க்கால்கள் மற்றும் மதகுகள் சீரின்மையால் நீர் தேங்கி நெற் பயிர்கள் அழிவடையும் நிலை காணப்படுகிறது. அண்மையில் பெய்த கனமழை காரணமாக அல்லாரை மற்றும் கச்சாய் பகுதிகளில் உள்ள குளங்கள் நிறைந்து வயல்கள் நீரில் மூழ்கி குருத்துக் கக்கி நெற் பயிர்கள் அழிவடைந்துள்ளன.

எனவே பயிர் அழிவைத் தடுக்க வாய்க்கால்கள் ஒழுங்கமைக்கப்படுவதுடன் இரு இடங்களில் பாலம் அமைக்க வேண்டியதும் அவசியம். அல்லாரை அறுகம்புலம் ஆலயத்திற்கு அருகாமையில் அறுகம்புல வீதியில் பாலம் அமைப்பதுடன், சாவகச்சேரி கச்சாய் வீதியில் ஆலடிப் பகுதியில் உள்ள ஒற்றைக் கண் மதகினை பாலமாக மாற்றியமைக்க வேண்டும்.

இதனூடாக மேலதிகமான வெள்ள நீர் விரைவாக கடலைச் சென்றடைந்து பயிரழிவு தடுக்கப்படும். தற்போது மதவுகள் மற்றும் வாய்க்கால்கள் சீரின்மையால் ஒவாளிக் குளம், கச்சாய் குளம், வண்ணாங் குளம், அடம்பிக்குளம், செட்டி குளம் உள்ளிட்ட குளங்களைச் சூழவுள்ள 53 ஹெக்டேயர் வயல் நிலங்களில் பயிரிடப்படும் நெற்பயிர்கள் முழுமையாக அழிவடையும் நிலை காணப்படுவதாக மேலும் அவர்கள் தெரிவித்தனர். (5-4-30)

# பலாலி விமான நிலையத்தை தொடர்ந்து செயற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## சுரேஷ் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாகவோ அல்லது பிராந்திய விமான நிலையமாகவோ தொடர்ந்து செயற்படுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பலாலி விமான நிலையம் என்பது பிரித்தானியா இலங்கையை ஆண்ட காலத்தில் பிரித்தானிய அரசாங்கத்தினால் தமது விமானப்படைக்காக கட்டப்பட்ட ஒரு விமான நிலையம். அதற்கு பின்பாக விமான நிலையம் என்பது கொழும்பு பலாலி மற்றும் பலாலியில் இருந்து திருச்சிக்கு சேவையாற்றிய விமான நிலையமாக இருந்து வந்தது. யுத்த காலத்தில் மீண்டும் இலங்கையின் விமான நிலையமாக மாறியிருந்தது. அதேவேளை இரத்மலானை-கொழும்புக்கு மான போக்குவரத்து விமான நிலையமாக இடம்பெறு வந்தது.

2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் 2019 ஆம் ஆண்டு தமிழ்க் கட்சிகளினால் இலங்கை-இந்திய அரசாங்கங்களிடம் விடுத்த கோரிக்கையின் பேரில் பலாலி விமான நிலையம் பிராந்திய விமான நிலையமாக மாற்றப்பட்டது. இந்திய அரசாங்கம் இதற்காக 300 மில்லியன் ரூபாவை வழங்கியிருந்தது.

சிறிய விமானங்கள் வந்து இறங்கும் விமான நிலையமாகவும் சென்னைக்கும் யாழ்ப்பாணம் பலாலிக்கும் இடையில் நடத்தும் விமான நிலையமாகத்தான் இருந்து வந்தது.

கடந்த காலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் ஒரு விமான நிலையம் அதனைப் பிராந்திய விமான நிலையமாக மாற்றினார்கள். ஆனால் சென்னைக்கும் பலாலிக்குமான போக்குவரத்து பயணச்சீட்டின் விலை கொழும்பில் இருந்து சென்னைக்குச் செல்வதிலும் பார்க்க மிக அதிகமாக இருந்தது.

இதனை கேட்டபோது இங்கு பலாலிக்கான வரி அதிகமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் அம்பாந்தோட்டை மத்தள விமான நிலையத்திற்கோ இல்லாத அளவுக்கான வரிகள் பலாலி விமான நிலையத்திற்கு அதிகரிக்கப்பட்டு இருந்தது.

அதேபோல் கொழும்பில் இருந்து 30 கிலோ கிராம் பொருட்கள் கொண்டு செல்ல முடியும்.

ஆனால் பலாலியில் இருந்து 23 கிலோ கிராம் பொருட்கள் தான் கொண்டு செல்ல முடியும் என்று இருந்தது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திற்கு கூடுதலான சலுகைகள் வழங்கி விமான நிலையங்களுக்கான போக்குவரத்துக்களை அதிகரித்து அப்பகுதிகளின் அபிவிருத்திகளை மேற்கொண்டு அழிவடைந்த பிரதேசத்தை வளப்படுத்துவதும் வேலைவாய்ப்புக்களை அதிகரிப்பதற்குப் பதிலாக அரசாங்கத்தின் சகல நடவடிக்கைகளும் முன்னரும் அதற்கு எதிராக இருந்தது. இன்று இவை எல்லாவற்றையும் தாண்டிப்போய் விமான நிலையத்தையே மூடும் நிலைக்கு வந்துள்ளது.


எனவே இதனை முக்கிய பிரச்சினையாக கருதி உடனடியாக அரசு இந்தியா வழங்கிய 300 மில்லியன் ரூபாய்களையும் பலாலி விமான அபிவிருத்திக்கு செலவு செய்ய வேண்டும் என்பது மாத்திரம் அல்ல அது தொடர்ச்சியாக சர்வதேச அல்லது பிராந்திய விமான நிலையமாக இயங்குவதற்குச் சகல நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு கிடைத்த அற்ப அபிவிருத்தியை இல்லாது செய்கின்ற நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## கொரோனா விழிப்புணர்வு செயற்பாடுகள்




(படம்-தவசீலன்)




(படம்-சதீஸ்)




(படம்-ஜோசப் நயன்)

**கொரோனா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் பொலிஸார் ஆட்டோக்களுக்கு விழிப்புணர்வு ஸ்ரிக்கர்களை ஒட்டும் நடவடிக்கையை அண்மையில் மேற்கொண்டனர்.**

# அவிசாவளையில் மீண்டும் கொத்தணி

(அவிசாவளை)

அவிசாவளை பிரதேசத்தில் இயங்கும் தொழிற்சாலை ஒன்றில் மீண்டும் கொரோனா கொத்தணி ஏற்படும் ஆபத்து காணப்படுவதாக அம்பகமுவ பொதுச் சுகாதார பரிசோதகர் கே.காமதேவன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கலுகல வீதி சோதனைச் சாவடிக்கு அருகில் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் கண்டறியப்பட்ட கொரோனா தொற்றாளர்களில் குறிப்பிடத்தக்களவினர் இந்த தொழிற்சாலையில் பணிபுரியும் ஊழியர்கள் எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலைமையில் குறித்த தொழிற்சாலையை அடிப்படையாகக் கொண்டு கொரோனா கொத்தணி ஏற்படும் ஆபத்து உருவாகியுள்ளது.

கலுகல பிரதேசத்தில் நடத்தப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வந்தவர்கள்.

இதன் காரணமாக அந்த பிரதேசத்தில் தொடர்ந்தும் கொரோனா மருத்துவப் பரிசோதனைகளை நடத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் காமதேவன் குறிப்பிட்டுள்ளார். (ஐ-4)

## மட்டக்களப்பில் டெங்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தீவிரமாக டெங்கு நோய் பரவி வருகிறதாகவும், இவ்வாண்டின் இதுவரையான காலப் பகுதியில் 2887 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாநகர சபை பிரதேசத்தில் டெங்கு நோய் பரவலைத் தடுக்க மட்டக்களப்பு சுகாதார வைத்தியதிகாரி பணிமனை பாரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (ஐ-4)

## மத்தியஸ்த சபைகள் திறக்கப்படும்

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று பரவல் காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ள மத்தியஸ்த சபைகள் விசாரணை நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி முதல் மீளத் திறக்கப்படும் என நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் மத்தியஸ்த சபை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கிடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் காணி மற்றும் நிதி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் தலா ஒரு மத்தியஸ்த சபையை நிர்மாணிக்க கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

## பிரதேச சபை உறுப்பினருக்கு கொரோனா

(சிலாபம்)

சிலாபம் வென்னப்புவை பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் கொரோனா வைரஸ் தொற்றிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த பிரதேச சபை உறுப்பினர் நிதி மோசடி சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டு பிணையில் விடுதலையாகி இருந்தார்.

வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த அவருக்கு நடத்தப்பட்ட மருத்தவப் பரிசோதனையில் கொரோனா வைரஸ் தொற்றி இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-4)

## நூதனசாலைகள் திறக்கப்படும்

(கொழும்பு)

மத்திய கலாசார நிதியத்திற்கு உட்பட்ட நூதனசாலைகள் நாளை 20 ஆம் திகதி முதல் மீளத்திறக்கப்படும் என மத்திய கலாசார நிதியம் அறிவித்துள்ளது.

மத்திய கலாசார நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)




## நம்பி ஏமாந்த விவசாயிகள்

கடந்த காலங்களில் விவசாயிகளுக்குரிய விதை உருளைக் கிழங்கினை அரசாங்கம் 50 வீதம் மானிய விலைக்கு வழங்கி வந்துள்ளது. இம்முறை அரசாங்க மானியம் விவசாயிகளுக்கு கிடைக்காத காரணத்தினால் கொழும்பை தலைமையகமாகக் கொண்ட விவசாய உற்பதிகளை விற்பனை செய்யும் பிரபல்ய விவசாய நிறுவனத்தின் ஊடாக விவசாயிகள் விதை உருளைக் கிழங்கினை பெறுவதற்கு கடந்த புரட்டாதி மாதமளவில் 25 கிலோ கிராம் பெட்டிக்கு 2500 ரூபா முற்பணமாக செலுத்தி பதிவு செய்துள்ளார்கள்.

ஆனால் விதை உருளைக்கிழங்கு வந்தவுடன் பணம் கட்டியவர்கள் அனைவருக்கும் அதனை பகிர்ந்தளிக்காது ஒரு பகுதியினருக்கு மட்டும் முழுவதையும் வழங்கி உள்ளார்கள். விதை உருளைக்கிழங்கு வழங்கப்படாத ஏனையவர் களுக்கு அடுத்த கப்பலில் வந்த உருளைக்கிழங்கு பழுதடைந்து விட்டது எனவும் காரணம் கூறி பணத்தினை மீளப்பெறுமாறும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

விவசாயிகள் உருளைக்கிழங்கு செய்கை பண்ணுவதற்கென அதிகமான பணத்தினை செலவு செய்து நிலத்தினை பண்படுத்தி விதை உருளைக்கிழங்கு கிடைக்கப்பெறாமல் ஏமாற்ற மடைந்துள்ளார்கள். முதலில் வந்த கிழங்கினை பணம் கட்டிய அனைவருக்கும் சமமாக பகிர்ந் தளித்திருந்தால் அனைத்து விவசாயிகளும் பயனடைந் திருப்பார்கள்.

ஆகவே குறிப்பிட்ட நிறுவனத்தினால் பாதிக்கப்பட்ட மேற்படி விவசாயிகளுக்கு நிறுவனம் இழப்பீட்டினை வழங்க வேண்டும் என்பது பாதிக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட விவசாயிகள்

## திருமலையில் போராட்டம்

(திருமலை)

அனைத்து மாணவர்களுக்கும் இணையக் கல்வியை இலவசமாக பெற்றுக் கொடுக்க அரசாங்கத்தை வலியுறுத்தி மக்கள் விடுதலை முன்னணியினர் திருகோணமலை, கிழக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றில் ஈடுபட்டனர்.

மக்கள் விடுதலை முன்னணி திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா தலைமையில் நேற்று இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் ஆதரவாளர்கள் பங்கேற்றனர்.

அனைத்து மாணவர்களுக்கும் இணையக்கல்வியினை இலவசமாகப் பெற்றுக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளின் கல்வி முடக்கம் உடனே தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் போன்ற பதாகைகளை ஏந்தியவாறு சமூக இடைவெளியைப்பேணி பலர் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். (ஐ-4)

## இந்து சமுத்திர விளிம்பு சங்கத்தின் அமைச்சர்கள் மட்ட சபை 2021-2023 இற்கான துணைத் தலைமை நாடாக இலங்கை

(கொழும்பு)

இந்து சமுத்திர விளிம்பு சங்கத்தின் அமைச்சர்கள் மட்ட சபை 2021 - 2023 இற்கான துணைத் தலைமை நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளமைக்கு வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நன்றி தெரிவித்துள்ளார்.

துணைத் தலைவர் பதவிக்காக மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தை ஏற்று. இலங்கை மீதான நம்பிக்கையை வெளிப்படுத்தியமைக்காக, ஐக்கிய அரபு இராச்சியத்தினால் 20 ஆவது அமைச்சர்கள் மட்ட கூட்டத்தில் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் இலங்கைத்தூதுக் குழுவிற்கு தலைமை தாங்கிய வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

இதன்போதே இந்து சமுத்திர விளிம்பு சங்கத்தின் அமைச்சர்கள் மட்ட சபை 2021 - 2023 இற்கான துணைத் தலைமை நாடாக இலங்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில், 2023 முதல் 2025 வரையான காலப் பகுதிக்கான தலைமைப் பொறுப்பை இலங்கை ஏற்றுக் கொள்ளவுள்ளது. 2020 ஆம் ஆண்டு டிசெம்பர் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் நடைபெற்ற சிரேஷ்ட அதிகாரிகள் குழுவின் 22 ஆவது அமர்விற்கு முன்னர் அமைச்சர்கள் மட்ட சபை காணப்பட்டது. அதற்கான இலங்கைத் தூதுக்குழுவிற்கு வெளியுறவு செயலாளர் அட்மிரல் பேராசிரியர் ஜயநாத் கொலம்பகே தலைமை தாங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)


சேவை நயப்பும் மணிவிழா வாழ்த்தும்

திரு.நாகராசா கிருபானந்தசிவம்
(பகுதித்தலைவர் SLTS-I)

அகவை அறுபதில் 18.12.2020 அன்று முப்பத்தொரு வருட சேவையைப் பூர்த்தி செய்து ஆறுதலடையும் நம் ஆசான் அவர்கள் புகழோடும், நலமோடும் வாழ வாழ்த்துகிறோம்.



ஆசிரியர் நலன்புரி மன்றம்
யா/நல்லூர் மங்கயர்க்கரசி வித்தியாலயம்

# விதைப் பொதிகள் வழங்கி வைப்பு



(மன்னார்)

சுய தேவை பொருளாதாரத்தை விருத்தி செய்யும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் எண்ணக்கருவில் உருவாகி தேசிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் பத்து இலட்சம் மனைப் பொருளாதார செயற்றிட்டத்தின் கீழ் விதைப் பொதிகள் வழங்கப்படுகின்றன.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 2 ஆயிரம் பயனாளிகளுக்கான விவசாய உற்பத்தி, விதை இனங்கள் வழங்கும் திட்டத்தில் முதல் கட்டமாக 50 பயனாளிகளுக்கு நேற்று முன்தினம் விதைப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

மன்னார் நகர பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு விதைப் பொதிகளை வழங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் மன்னார் நகர பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி. சகீலாபானு, பாராளுமன்ற உறுப்பின ரின் இணைப்பாளர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-285)

# மக்களை அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்து

(முறிகண்டி)

கனகாம்பிகைக்குளம் மற்றும் பிரமந்தனாறு ஆகிய குளங்களின் கீழ் உள்ள மக்களை அவதானமாக இருக்குமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. தற்பொழுது பெய்து வரும் பலத்த மழை காரணமாக கிளிநொச்சியில் உள்ள நீர்ப்பாசன குளங்களின் நீர் மட்டம் அதிகரித்துள்ளதுடன், சில குளங்கள் வான்பாய்ந்தும் வருகின்றன.

இந்நிலையில் கனகாம்பிகைக்குளம், பிரமந்தனாறு குளம், வன்னேரிக்குளம், கரியாலைநாகபடுவான் குளம் ஆகிய குளங்களின் தாழ்நிலப் பகுதியில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு நீர்ப்பாசன திணைக்களம் அறிவுறுத்தி உள்ளது.

மழையுடனான காலநிலை தொடர்வதனால் மக் கள் அவதானத்துடன் செயற்படுமாறு மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையமும் மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றது.

நேற்றுக் காலை 7 மணிவாசிப்பின் பிரகாரம் 36 அடி கொள்ளளவு கொண்ட இரணைமடு குளம் 31 அடி 9.5" அங்குலமாகவும், 26 அடி கொள்ளளவு கொண்ட கல்மடு குளம் 23 அடி 09" ஆகவும், 25 அடி கொள்ளளவு கொண்ட அக்கராயன் குளம் 23 அடி 09" ஆகவும் உயர்ந்துள்ளதாக நீர்ப்பாசன திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கனகாம்பிகைக்குள்ம், கரியாலை நாகபடுவான் குளம், வன்னேரிக்குளம் ஆகியன வான் பாய்ந்து வரும் நிலையில் மக்களை அவதானத்துடன் செயற்படுமாறும் நீர்ப்பாசனத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன் இடர்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் கிராம உத்தியோகத்தர், இராணுவத்தினர், மற்றும் பொலிஸாரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறான காலநிலை தொடரும் நிலையில் மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறும், குளங்கள்,மற்றும்நீரோடும் பகுதிகளிற்கு செல்வதை தவிர்க்குமாறும் மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையம் மக்களுக்கு தொடர்ந்தும் அறிவுறுத்தி வருகின்றது.(5-4-100)

# இரண்டானது கிளிநொச்சி கல்வி வலயம்

(முறிகண்டி)

கிளிநொச்சி கல்வி வலயத்தினை இரண்டாகப் பிரிப்பதற்கு மாவட்ட அபிவிருத்திகுழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவட்ட அபி விருத்திக்குழு கூட்டத்தில் குறித்த தீர்மானம் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் தனி கல்வி வலயமாக இருந்த கிளிநொச்சி கல்வி வலயமானது கரைச்சி, பூநகரி கல்வி கோட்டங்களை இணைத்து ஒரு கல்வி வலயமாகவும், கண்டாவளை, பச்சிலைப்பள்ளி கல்வி கோட்டங்களை இணைத்து மற்றுமொரு கல்வி வலயமாகவும் இரண்டாகப் பிரிக்க நேற்றைய அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் ஆராயப்பட்டது. பின்னர் ஏகமனதாக தீர்மானம் எட்டப்பட்டதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் தெரிவித்துள்ளார்.

எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் தெரிவிக்கையில்,

வலய பிரிப்பு என்பது ஏற்கனவே யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது. இதற்கு கல்வி அமைச்சினால் அனுமதி தரப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (5-4-100-312)

# வெடிபொருட்கள் மீட்பு



(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுக் குளப் பகுதிக்குச் செல்லும் பிரதான வீதியருகில் இரு வேறு வெடி பொருட்கள் இராணுவத்தினரால் இனங்காணப்பட்டன.

இவ் விடயம் தொடர்பாக தருமபுரம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனையடுத்து பொலிஸார் நீதிமன்றின் அனுமதியுடன் வெடிபொருட்களைச் செயலிழக்கச் செய்யும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.(4-5-316)

# கசிப்பை கட்டுப்படுத்த மகஜர் கையளிப்பு

(முறிகண்டி)

கண்ணகிபுரம் மேற்கு மக்கள் தமது பிரதேசத்தில் உள்ள கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்தக்கோரி கிளிநொச்சி பிரதி பொலிஸ்மா அதிபரிடம் மகஜர் கையளித்துள்ளனர். நேற்றுக் காலை இரணைமடு சந்தியில் அமைந்துள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் அலுவலகத்திற்கு சென்ற குறித்த கிராமத்தின் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் மகஜரை கையளித்தனர்.

தமது பிரதேசத்தில் காணப்படும் கட்டவிரோத மது உற்பத்தி மற்றும் விற்பனையை கட்டுப்படுத்தி எதிர்கால சந்ததியின் வாழ்விற்கு சுமுகமான சூழலை ஏற்படுத்தி தருமாறு தெரிவித்தே பிரதேச மக்களால் ஒப்பமிடப்பட்டு குறித்த மகஜர் கையளிக்கப்பட்டுள்ளது. (5-4-100)



சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினத்தை முன்னிட்டு வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் ஆலயத்தில் நேற்று விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

# திருநாவற்குளத்தில் 4 பேருக்கு தொற்று உறுதி

(நெளுக்குளம்)

வவுனியா திருநாவற்குளத்தில் 4 பேருக்கு கொரோனாத்தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் திருநாவற்குளத்தை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. அவருடைய மனைவி, பிள்ளைகள் மற்றும் அவரது வீட்டில் தங்கியிருந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி இவர்களிற்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் தொற்று ஏற்பட்டுள்ளமை நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது.

இதேவேளை வவுனியாவில் இதுவரை 31 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் வவுனியாவில் பல இடங்களிலும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (5-4-299)

# கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடம் 886 விபத்துக்கள்

## 11 மரணங்கள் பதிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடம் ஜனவரி முதல் 886 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளதுடன், 11 உயிரிழப்புக்களும் பதிவாகியிருப்பதாக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ந.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வீதி விபத்துக்களை தவிர்ப்பது தொடர்பில் கிளநொச்சியை ஒரு முன்னோக்கிய மாவட்டமாகக் கொண்டு செல்ல வேண்டுமெனவும் அதற்கான ஆலோசனைகள் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்ட போது, கருத்துத்தெரிவித்த பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், கிளிநொச்சி மாவட்டத்தின் இந்த வருடத்தில் மாத்திரம் 886 வீதி விபத்துக்கள் பதிவாகியுள்ளன.

இதனால் 11 உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன.

.குறிப்பாக, அதிகரித்த வேகம் மற்றும் சாரதிகளின் தூக்கம் என்பவற்றினால் இந்த விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

நகரத்திற் குள்ளேயே டிப்பர் வாக னங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் அதிகரித்த வேகத்தில் பயணிக்கின்றன.

வேகக்ககட்டுப்பாடுகளை ஏற்படுத்த வேண்டிய தேவையிருப்பதாகவும் குறிப்பிட்டார். (4-5-315)

## இராசிபலன்

19.12.2020
மார்கழி 04, சனிக்கிழமை
பஞ்சமி மாலை 6.10 மணிவரை
அவிட்டம் முன்னிரவு 11.40 மணிவரை
சுபநேரம் 3.23-4.53 மணிவரை
இராகுகாலம் 9.23-10.53 மணிவரை
சந்திராஷ்டமம் புனர்பூசம், பூசம்
சித்தாமிர்தம்

வளவன்


மேஷம்

ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத்தினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


ரிஷபம்

செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத் தோன்றும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.


மிதுனம்

பகை விலகி பாசம் கூடும் நாள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.


கடகம்

நேசித்த ஒருவருடன் யோசித்துப் பேசும் சூழ்நிலை ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, திருடர் பயமுண்டு.


சிம்மம்

தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களின் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


துலாம்

வளர்ச்சி கூடும் நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நிதி நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


விருச்சிகம்

சந்தித்த நபர்களால் சந்தோசம் கிடைக்கும், சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வாகன சுகமுண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு.


தனுசு

நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், உறவினர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும் நாள்.


மகரம்

பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொதுவாழ்வில் புகழ் கூடும், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள்.


கும்பம்

சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், எடுத்த காரியங்களில் சற்று அலைச்சல்கள் ஏற்படலாம்.


மீனம்

ஆனந்த வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், மூத்த சகோதரர்கள் உங்களின் நலனில் அதிக அக்கறை காட்டுவர், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது.

# வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

# ஒரே நாளில் 10 பேர் உயிரிழப்பு

**(கொழும்பு)**

**நாட்டில் நேற்று முன்தினம் மாத்திரம் 10 பேர், வீதி விபத்துக்களினால் உயிரிழந்துள்ளதாக பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.**



வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளமை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிவேகமாக வாகனம் செலுத்துதல், குடிபோதையில் வாகனம் செலுத்துதல் மற்றும் சாலை விதிகளை மீறிச் செயற்படுகின்றமையே வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணமாக அமைகின்றது.

ஆகவே வாகனம் செலுத்துபவர்கள், வீதி சட்டமுறைகளை பின்பற்றி செயற்பட்டால், குறித்த விபத்துக்களை ஓரளவு தவிர்க்க முடியும்.

இதேவேளை நாடு முழுவதும், வீதி சட்ட விதி முறைகளை மீறி வாகனம் செலுத்துபவர்களை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பது அரசியல்வாதிகளின் பொறுப்பல்ல



(கொழும்பு)

பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பது அரசியல்வாதிகளின் பொறுப்பு இல்லை என அமைச்சர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

பொதுமக்களின் பிரச்சினைகளுக்கான காரணத்தை நீக்குவதே அரசியல்வாதிகளின் பொறுப்பு என அமைச்சர் தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசியல்வாதிகள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அல்ல பிரச்சினைகளை தீர்ப்பது அதிகாரிகளின் வேலை. அரசியல்வாதிகளின் பொறுப்பு என்னவென்றால் பிரச்சினைகளுக்கான காரணத்தை நீக்குதலாகும்.

பாரம்பரிய அரசியல் நடைமுறைகளின்படி இது கடினமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4)

# வெளிநாட்டுக் கடன்கள் செலுத்தப்பட்டுள்ளது

(கொழும்பு)

நாட்டிற்கு பெறப்பட்டிருந்த கடன்களுக்கான தவணை கொடுப்பனவுகள் தடையின்றி அரசாங்கத்தினால் முறையாக செலுத்தப்பட்டுள்ளதாக பொருளாதார மறுமலர்ச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மத்திய மாகாணத்திற்கான வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயும் விசேட நிகழ்வு, கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில், அதில் உரையாற்றும்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், அரசாங்கத்தினால் இந்தக் கடன்களை செலுத்த முடியாது போகுமென பலரும் விமர்சித்து வந்த நிலையில், அதனை அரசாங்கம் வெற்றிகரமாக செயற்படுத்தி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் வருகை தடைப்பட்டமை மற்றும் முதலீடுகள் தடைப்பட்டமை உள்ளிட்ட காரணங்கள் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)



# இலங்கை மத்திய வங்கிக்கு பிரதி ஆளுநர்கள் இருவர்

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கிக்கு பிரதி ஆளுநர்கள் இருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கியில் உதவி ஆளுநர்களாக செயற்பட்ட யிவட் பெர்னாண்டோ மற்றும் தம்மிக்க நாணயக்கார ஆகியோர் புதிய பிரதி ஆளுநர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

யிவட் பெர்னாண்டோ 30 வருடங்களுக்கு மேலாக இலங்கை மத்திய வங்கியில் பணியாற்றியவராவார். இந்த காலப் பகுதியில் இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளராகவும் அந்நிய செலாவணி கட்டுப்பாட்டாளராகவும் செயற்பட்டுள்ளார்.

வங்கி மேற்பார்வை, வர்த்தக நிதி, அந்நிய செலாவணி, ஊழியர் சேமலாப நிதியம் உள்ளிட்ட திணைக்களங்களின் உதவி ஆளுநராகவும் அவர் செயற்பட்டுள்ளார்.

இதேவேளை, பிரதி ஆளுநராக புதியதாக நியமனம் பெற்றுள்ள தம்மிக்க நாணயக்கார இலங்கை மத்திய வங்கியில் 27 வருட சேவை அனுபவமுள்ள ஒருவராவார்.

இதற்கு முன்னர் அரச கடன், பிரதேச அபிவிருத்தி, அலுவலக சேவை முகாமைத்துவம் உள்ளிட்ட திணைக்களங்களின் உதவி ஆளுநராக இவர் செயற்பட்டுள்ளார். (ஜ-4)

# கொரோனா வைரஸின் தோற்றம்; ஆராய சீனா செல்லும் உலக சுகாதார அமைப்பு

(ஜெனீவா)

**கொரோனா வைரஸ் தொற்றின் தோற்றம் குறித்து ஆய்வுசெய்ய சர்வதேச நிபுணர் குழு அடுத்த மாதம் சீனா செல்லவிருப்பதாக உலக சுகாதார அமைப்பு அறிவித்துள்ளது.**

கொரோனா தீநுண்மி எந்த உயிரினத்தில் தோன்றி, அது மனிதர்களுக்குப் பரவத் தொடங்கியது என்பது குறித்த ஆய்வுகளை சர்வதேச நிபுணர் குழு சீனாவில் மேற்கொள்ள விருக்கிறது.

சீனாவின் ஹூபேய் மாகாணம்- வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் பரவத் தொடங்கிய கொரோனா நோய்த்தொற்று, உலகம் முழுவதும் 210 க்கும் மேற்பட்ட நாடுகள் மற்றும் தன்னாட்சிப் பிரதேசங்களில் பரவியுள்ளது.

முன்னதாக உண்மைகளைக் கண்டறிய 10 நிபுணர்கள் அடங்கிய குழுவை உலக சுகாதார அமைப்பு கடந்த ஜூலை மாதம் சீனாவுக்கு அனுப்பியது.

தொற்றுநோயியல் நிபுணர்கள், விலங்கு மருத்துவ வல்லுநர்களை உள்ளடக்கிய அந்தக் குழு, கொரோனாவின் தோற்றம் குறித்த சர்வதேசக் குழு விசாரணைக்கான முன்னேற்பாடுகளை மேற்கொண்டது.

அதிக நிபுணர்களைக் கொண்ட அந்த சர்வதேசக் குழு, கொரோனா தீநுண்மியின் பயணத்தை தொடக்கத்திலிருந்து கண்டறியும் வகையில், அந்த நோயால் முதலில் பாதிக்கப்பட்டவர்கள் யார் என்பதை ஆய்வு செய்யும் என்று கூறப்பட்டது.

கொரோனாவின் தோற்றம் குறித்த ஆய்வு செய்வதற்கான சர்வதேசக் குழு அடுத்த மாதம் சீனா செல்வதை உலக சுகாதார அமைப்பு தற்போது உறுதி செய்துள்ளது.

வுஹான் நகரிலுள்ள இறைச்சிச் சந்தையில்தான் கொரோனா நோய்த்தொற்று முதல் முதலாகப் பரவத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொரோனா தடுப்பூசி போட்ட இருவருக்கு அலர்ஜி

(நியூயோர்க்)

அமெரிக்காவில் பைசர் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களில், வைத்தியசாலைகளில் பணிபுரியும் சுகாதாரப் பணியாளர்கள் இருவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது

அமெரிக்காவில், அவசர பயன்பாட்டுக்காக பைசர்-பயோன்டெக் நிறுவனங்கள் இணைந்து உருவாக்கியுள்ள பைசர் கொரோனா தடுப்பூசிக்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது.

இதையடுத்து, முதற்கட்டமாக கொரோனா தடுப்பு முன்களப் பணியாளர்களான சுகாதாரப் பணியாளர்களுக்கு தடுப்பூசி போடும் பணி தொடங்கி நடந்து வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்காவின் அலாஸ்கா மாகாணத்தில் உள்ள பார்ட்லெட் மண்டல வைத்தியசாலையில் பைசர் தடுப்பூசி போட்டுக்கொண்டவர்களில், அந்தவைத்தியசாலையில் பணிபுரியும் சுகாதார பணியாளர்கள் 2 பேருக்கு ஒவ்வாமை ஏற்பட்டதாக நியூயோர்க்டைம்ஸ்நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

அவர்களில் பெண் சுகாதார பணியாளர் ஒருவருக்கு தடுப்பூசி போட்ட 10 நிமிடத்தில் முகம் மற்றும் உடலில் எரிச்சல், இதய துடிப்பு அதிகரிப்பு, மூச்சுவிட சிரமம் ஏற்பட்டு இருக்கிறது. மற்றொருவருக்கு கண்களில் வீக்கம், தலைச்சுற்றல், தொண்டைக் கரகரப்பு ஏற்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் அமெரிக்காவில் பைசர் தடுப்பூசி போட்டுக்கொண்ட சுகாதார பணியாளர்களில் மேற்கண்ட இருவருக்கு மட்டும்தான் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்டு கடத்தல் கும்பலை கைது செய்த பொலிஸார்



(லிமா)

கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்ட பொலிஸார் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட கும்பலை அதிரடியாக கைது செய்தனர்.

குற்றவாளிகளை பிடிக்க பொலிஸார் விதவிதமான யுக்திகளை கையாள்வது வழக்கம். அந்த வகையில், கிறிஸ்மஸ் பண்டிகை நெருங்கி வரும் நிலையில் பிரபலமான கிறிஸ்மஸ் தாத்தா வேடமிட்டு போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றவாளிகளை கைது செய்த சம்பவம் அரங்கேறியுள்ளது.

பெரு நாட்டின் தலைநகர் லிமாவில் உள்ள ஒரு வீட்டில் போதைப் பொருள் கடத்தல் சம்பவம் அரங்கேறி வருவதாக பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பொலிஸ் உடையில் சென்றால் கடத்தல் கும்பல் உஷார் ஆகி விடும் என எண்ணிய பொலிஸ் கிறிஸ்மஸ் பண்டிகையை பயன்படுத்தி கடத்தல் கும்பலை பிடிக்க முடிவு செய்தனர்.

இதற்காக இரண்டு பொலிஸ் அதிகாரிகள் கிறிஸ்மஸ் தாத்தா வேடமணிந்து போதைப் பொருள் கும்பல் பதுங்கி இருந்த வீட்டின் அருகே வாகனத்தில் சென்றனர்.

அங்கு அந்த வீட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டது தெரியவந்தது.

உடனடியாக அந்த கடத்தல் கும்பலை கைது செய்த பொலிஸார் அவர்களிடம் இருந்து கிலோ கணக்கில் போதைப் பொருளை கைப்பற்றினர்.

மேலும், துப்பாக்கி உட்பட பயங்கர ஆயுதங்களையும் கைப்பற்றினர். (நி-4)

# அமெரிக்காவில் பனிப்புயல் இருவர் பலி



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் பனிப்புயல் ஒன்று அந்நாட்டின் கிழக்கு கடற்கரை பகுதியைத் தாக்கியதில், பல மாநிலங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த புயல் கொலராடோ விலிருந்து மைனே மாநிலம் வரை நீடிக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

மேலும் 14 மாநிலங்களுக்கு எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன.

சில இடங்களில் இரண்டு அடி (60 செ.மீ) பனிப்பொழிவு இருக்கும் என்று கணிக்கப் பட்டுள்ளது. (நி-4)

# ஒரு ரூபாய் என விலை நிர்ணயம்; பயிரிட்ட காலிஃப்ளவரை அழித்த விவசாயி

(லக்னோ)

காலிஃப்ளவர் கிலோ 1 ரூபாய் என விலை நிர்ணயம் செய்யப்பட்டதால் பயிரிடப்பட்ட அனைத்து காலிஃப்ளவர் செடிகளையும் விவசாயி அழித்துள்ளார்.

மேலும், வேளாண் சட்டங்களை திரும்பப்பெற வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

உத்தர பிரதேச மாநிலம் ஷாம்லி மாவட்டம் மாயபுரி கிராமத்தை சேர்ந்த விவசாயியான ரமேஷ். இவர் தனது நிலத்தில் காலிஃப்ளவர் செடியைப் பயிரிட்டுள்ளார்.

தற்போது காலிஃப்ளவர் அனைத்தும் விற்பனைக்கு தயாரானதால் அதை அறுவடை செய்து விற்பனை செய்ய திட்டமிட்டிருந்தார்.



ஆனால், விவசாயியை அணுகிய தனியார் விற்பனையாளர்கள் காலிஃப்ளவரை கிலோவுக்கு 1 ரூபாய் மட்டுமே விலை நிர்ணயம் செய்து எடுத்துக்கொண்டனர். காலிஃப்ளவர் பயிரிட்டு அதை அறுவடை செய்ய ஆன தொகையை விட விற்பனையாளர்கள் நிர்ணயித்த தொகை மிக மிகக் குறைவாக இருந்தது.

இதனால், வேதனையடைந்த ரமேஷ் தான் பயிரிட்ட எஞ்சிய காலிஃப்ளவர் செடிகளை டிராக்டரை கொண்டு அழித்தார். (நி-4)

# 4 செயற்கைக் கோள்களை ஏவுகிறது இஸ்ரோ

(டில்லி)

2021ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பி.எஸ். எல். வி. சி-51 ரொக்கெட், நான்கு செயற்கைக் கோள்களுடன் விண்ணில் செலுத்தப்படவுள்ளதாக இஸ்ரோ தலைவர் சிவன் தெரிவித்துள்ளார். (நி-4)

# மக்ரோனுக்கு கொரோனா



(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

மக்ரோன் தனது ஜனாதிபதிக்குரிய கடமைகளை தனிமைப்படுத்தலில் இருந்தவாறு மேற்கொள்வார் என்று உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2020-15.01.2021



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சூரியன் பஞ்சம ஸ்தானத்தில் சனியோடு கூடியிருக்கின்றார். இப்பொழுது குரு பகவான் 6 ஆம் இடத்தில் சஞ்சரிக்கின்றார். '6 இல் குரு ஊரில் பகை' என்பார்கள். எனவே மறைமுக எதிர்ப்புகளுக்கு மத்தியில்தான் உங்கள் முன்னேற்றம் இருக்கும். குறிப்பாக எதிலும் கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரமிது.

**ராகு-கேதுக்களின் ஆதிக்கம்**

இம்மாதம் சுக ஸ்தானத்தில் உள்ள கேது, சகாய ஸ்தானாதிபதி சுக்கிரனோடு கூடியிருக்கின்றார். 10 ஆம் இடத்தில் ராகு பலம் பெற்றிருக்கின்றார். இடம், பூமி விற்பனையால் இலாபம் கிடைக்கும். ஒரு சிலர் வாங்கிய இடத்தை விற்று, அதன் மூலம் வரும் தொகையை மூலதனமாக்கி தொழில் வளர்ச்சி காண்பர். பழைய தொழிலை அப்படியே விட்டுவிட்டு அல்லது யாரிடமாவது ஒப்படைத்து விட்டு புதிய தொழிலை நாடிச்செல்லும் வாய்ப்பும் உண்டு. சுகஸ்தானத்தில் கேது இருப்பதால் உங்களுக்கோ, உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ ஆரோக்கியத் தொல்லைகள் ஏற்படலாம்.

**மகரச் சனி சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் டிசெம்பர் 26 ஆம் திகதி தனது சொந்த வீடான மகர இராசிக்கு வருகின்றார். 6 இற்கு

## எதிலும் கவனத்துடன் செயற்பட வேண்டிய நேரமிது

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

அதிபதி 6 இல் வரும்பொழுது பெரியளவில் பாதிப்புகள் இருக்காது. ஜீவன ஸ்தானம் பலப்படுவதால் தொழில் முன்னேற்றம் ஏற்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். தொழில்கள் தடையின்றி சீராக நடைபெறும். சுபவிரயங்கள் அதிகரிக்கும். கொடுக்கல்-வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள். வளர்ச்சிப் பாதைக்கு வழிவகுத்துக் கொடுக்கும் விதத்தில், சனியின் சஞ்சாரம் உள்ளது.





**மகர புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 4 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் டிசெம்பர் 30 ஆம் திகதி மகர இராசிக்கு வருகின்றார். மறைந்த புதனால் நிறைந்த தன லாபம் கிடைக்கும். மேலும் அங்குள்ள சனி மற்றும் குருவோடு புதன் சேருவதால், தொழிலில் எதிர்பார்த்தைக் காட்டிலும் கூடுதல் இலாபம் கிடைக்கும். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி புதிய திட்டங்களைத் தீட்டி வெற்றி காண்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஒரு மங்கல நிகழ்வு நடைபெறலாம். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் எதிர்பாராத விதத்தில் வந்து சேரும்.

**தனுசு சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். பஞ்சம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நல்ல தகவல்கள் இல்லம் தேடி வரும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து அதன் மூலமும் உதிரி வருமானங்கள் கிடைக்கலாம். அசையாச் சொத்துக்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளின் கல்யாண வாய்ப்புகள் கைகூடும். அரசு வழியிலும் எதிர்பார்த்த நன்மைகள் உண்டு. இம்மாதம் ராகு- கேதுக்களுக் குரிய வழிபாடுகளை மேற்கொள்வதன் மூலமும் தடைகள் அகன்று தக்க பலன் கிடைக்கும்.



சார்வரி வருடம் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசியை குரு பார்க்கின்றார். குரு நீசம் பெற்று பார்த்தாலும், அதன் பார்வைக்குப் பலன் அதிகம். எனவே ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். மேலும் குருவின் பார்வை 9, 11 ஆகிய இடங்களிலும் பதிவதால், தொழில் மற்றும் உத்தியோகத்தில் இதுவரை இருந்த தடைகள் அகலும்.

**ராகு-கேதுக்களின் ஆதிக்கம்**

இம்மாதம் சர்ப்பக் கிரகங்களான ராகு 9 ஆம் இடத்திலும், கேது மூன்றாமிடத்திலும் சஞ்சரிக்கின்றார்கள். 9 இல் ராகு சஞ்சரிப்பதால் பயணங்கள் அதிகரிக்கும். பழைய வாகனங்களை கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். ஆனால் சகோதரிகள் வழியில் மட்டும் பிரச்சினைகள் உருவாகத்தான் செய்யும்.

**மகரச் சனி சஞ்சாரம்**

இதுவரை உங்கள் இராசிக்கு 4 ஆம் இடத்தில் அர்த்தாஷ்டமச் சனியாக சஞ்சரித்து வந்த சனி பகவான், டிசெம்பர் 26 ஆம் திகதி பெயர்ச்சியாகிறார். அவர் உங்கள் இராசிக்கு 5 ஆம் இடமான மகர இராசிக்கு வருகிறார். பஞ்சம ஸ்தா

## இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு கைகூடும்

னாதிபதியான சனி, பஞ்சம ஸ்தானத்திலேயே குருவோடு இணைந்து சஞ்சரிக்கும் பொழுது தொட்டது துலங்கும். உற்றார், உறவினர்கள் மட்டுமல்லாமல், நண்பர்களும் உங்களுக்கு போட்டி போட்டுக் கொண்டு உதவ முன்வருவர். இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள், வீடு மாற்றங்கள் உருவாகலாம். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த முன்னேற்றம் எளிதில் கிடைக்கும்.

**மகர புதன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்திற்கு அதிபதியான புதன்,




டிசெம்பர் மாதம் 30 ஆம் திகதி மகர இராசிக்கு செல்கின்றார். பஞ்சமத்தில் சஞ்சரிக்கும் புதன், அங்கு குரு மற்றும் சனியோடு இணைவதால் இக்காலம் ஒரு இனிய காலமாக அமையும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். புதிய முயற்சிகளில் வெற்றி காண்பீர்கள். மாமன், மைத்துனர் வழியில் ஏற்பட்ட மனக் கசப்புகள் மாறும்.

குடும்பத்தில் இளைய சகோதரத்துடன் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். காரியங்களில் இருந்த சுணக்க நிலை மாறி, சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். தர்ம காரியங்களிலும் மனம் ஈடுபடும். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள்.

**தனுசு சுக்கிரன் சஞ்சாரம்**

உங்கள் இராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் ஜனவரி 5 ஆம் திகதி சுகஸ்தானம் எனப்படும் 4 ஆம் இடத்திற்குச் செல்கின்றார். 9 இற்கு அதிபதி 4 ஆம் இடத்திற்குச் செல்லும்பொழுது, எதிர்பாராத நல்ல திருப்பங்கள் ஏற்படும்.

இல்லம் கட்டிக் குடியேறும் வாய்ப்பு கைகூடலாம். செவ்வாய் பலமறிந்து 'வீடாக வாங்கலாமா அல்லது மனைகட்டிக் குடியேறலாமா?' என்று யோசிப்பது நல்லது. கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். வாகனம் வாங்கும் யோகம் உண்டு. சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்து பெற்றவர் களின் ஆதரவும், நட்பும் கிடைக் கும்.


இம்மாதம் புதன்கிழமை தோறும் பெருமாள் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

# தொற்றாளருடன் புகைப்படம் எடுத்த சுகாதார ஊழியர் தனிமைப்படுத்தப்பட்டார்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றாளரான யுவதியுடன் புகைப்படம் எடுத்த சுகாதார பிரிவின் ஊழியர் ஒருவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.



கண்டி மாவட்டத்தின் உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

உள்ளூராட்சி சபை அமைந்துள்ள நகருக்கு வெளியில் 35 பேர் அடங்கிய குழுவில் 7 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அந்த 7 பேரும் சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் ஏனையோர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-4)

# 600 ஊழியர்களுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் 600 ஊழியர்களுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி சுமித் அழககோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனவரி மாதத்தின் பின்னர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டவர்கள் மாத்திரமே தொடர்ந்தும் திணைக்கள பணியில் ஈடுபடுவார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலஞ்ச ஊழல் தொடர்பில் பொதுமக்களிடம் இருந்து கிடைத்த முறைப்பாடுகளுக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ-4)

# 8 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

ஸ்ரீலங்கன் கேட்டரிங் செயற்பாட்டு பிரிவின் பணியாளர்கள் 8 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் பணியாளர் ஒருவருக்கு இந்த மாதம் 14 ஆம் திகதி செய்யப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையின் போது, அவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டதுடன், அவருடன் பணிபுரிந்த ஏனைய 7 பணியாளர்களுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவர்களுடன் பணியாற்றிய ஏனைய அலுவலக சபையினருக்கும் பி.சி. ஆர்.பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. (ஐ-4)

# சிறுமி மீட்பு

(கொழும்பு)

பெற்றோர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டினையடுத்து கைவிடப்பட்ட நிலையில் வசித்து வந்த 3 வயது சிறுமி ஒருவர் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

மடுல்சீமை பகுதியில் குடில் ஒன்றிலிருந்து குறித்த சிறுமி மீட்கப்பட்டுள்ளார்.

மீட்கப்பட்ட சிறுமி நீராட்டப்பட்டதன் பின்னர் உணவு வழங்கப்பட்டு சிறுவர் காப்பகத்தில் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஐ-4)

# ஒத்திவைப்பு

(கொழும்பு)

மகர சிறைச்சாலை சம்பவத்தில் மரணித்த 7 கைதிகளின் சரீரங்களின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெறாமையினால் அவை தொடர்பான வழக்கு எதிர்வரும் 23 ஆம் திகதி வரையில் பிற்போடப்பட்டுள்ளது.

வத்தளை நீதவான் புத்திக சிறி ராகலவின் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றில் கருத்துக்களை முன்வைத்தனர்.

பின்னர் குறித்த நான்கு சரீரங்களையும் தகனம் செய்யுமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ஐ-4)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் விசேட நடவடிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களில் நிலவும் பதவி வெற்றிடங்களை நிவர்த்தி செய்தல் மற்றும், அதற்கான சட்டதிட்டங்களை மறுசீரமைத்தல் உள்ளிட்ட விடயங்களை முன்னெடுப்பதற்கு தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், இந்த விடயம் தொடர்பாக மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்றங்கள் அமைச்சுக்கு தெளிவுபடுத்தவும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களுக்கிடையிலான முதலாவது சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிலையில், இந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.


இதேவேளை, 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்காக 7 ஆயிரம் மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் காலத்தில் அதனை சராசரியாக 4 ஆயிரத்து 566 மில்லியன் ரூபா வரையில் மட்டுப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அதேபோன்று, 2020 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பில் இடம்பெற வேண்டிய புதிய வாக்காளர் பதிவுகள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ஐ-4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2186

### துவாரகா


வீடு கட்டும் பொழுது உங்கள் சமையலறையில் இதுபோல செய்யலாமே




நீயாடா அரைச்சித் தருவ

### சஞ்சீவி

ஆமா...உங்க ஊர்ல மழை எப்படி பெய்யுது?



எப்பவும் போல தண்ணியா தான்டா பெய்யுது!

### தனஞ்சயன்

நீங்க இரண்டு பேரும் இருக்குற வரைக்கும்



நான் மட்டும் இல்லடா நாட்ல முக்கால்வாசி பேர் முன்னுக்கு வரப்போவதில்லை டா...

### ருக்குமணி

மலிஞ்சா சந்தைக்கு வரும் என்டாங்க



அப்ப புரியல. இப்ப புரியுது.

### புவனேஸ்


முதன் முதலா நமக்கென்னு ஒரு Bike வேண்டி அதை முதல் முறை ஓட்டிட்டு போகும் போது வரும்பாரு ஒரு Feeling...




அது வேற லெவல் Feeling மச்சான்.

### கண்ணன்

வர்ற வழியில இந்த போன் மண்ணுல கிடந்திச்சு, எடுத்து தொடச்சு ஒன் பண்ணினா... இன்னும் 98% சார்ஜ் இருக்கு...



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

## எம்.சி.சி.ஒப்பந்தம்

# அரசின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை



(கொழும்பு)

எம்.சி.சி. என்ற மிலேனியம் சவால்கள் ஒத்துழைப்பு உடன்படிக்கை தொடர்பாக தங்களது கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எம்.சி.சி.எனப்படும் அமெரிக்க மிலேனியம் சவால் ஒத்துழைப்பு உடன்படிக்கையின் ஊடாக இலங்கைக்கு முன்மொழியப்பட்டிருந்த 480 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தொகை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மிலேனியம் சவால் ஒத்துழைப்பு குழு இந்த அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

மிலேனியம் சவால் ஒத்துழைப்பு உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை என்ற நிலைப்பாட்டில் நடப்பு அரசாங்கம் இருந்தது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் சமயத்தில், அப்போதைய பிரதமராக பதவிவகித்த ரணில் விக்கிரமசிங்க அவசரமாக இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடும் யோசனையை அமைச்சரவையில் முன்வைத்தபோது, பெரும் எதிர்ப்பலை எழுந்திருந்தது.

நடப்பு அரசாங்கம் இது குறித்து அமெரிக்காவுடன் பேசுவதாக தெரிவித்து வந்தபோதும், எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை

இந்த நிலையில், இலங்கைக்கு முன்மொழியப்பட்டிருந்த 480 மில்லியன் அமெரிக்க டொலர் மானியத்தொகை நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்த உடன்படிக்கையின் கீழ் பயன்பெரும் நாடுகளின் பட்டியலில் இருந்து இலங்கை நீக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த உடன்படிக்கை ஊடாக கிடைக்கின்ற 480 மில்லியன் டொலர்களை விட, நாடும் மக்களும் இந்த அரசாங்கத்துக்கு முக்கியம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# மருந்து வகைகளின் தரம் குறித்து ஆராய ஆலோசனை

(கொழும்பு)

கொரோனா ஒழிப்புக்காக உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட 37 மருந்து வகைகளின் தரம் குறித்து ஆராயுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, உள்நாட்டு வைத்திய தேசிய சபை மற்றும் ஆயுர்வேத திணைக்களம் ஆகியவற்றுக்கு இவ்வாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

குறித்த மருந்து வகைகளின் நோய் எதிர்ப்பு தரத்தின் சாதக .தன்மை குறித்து ஆராய்ந்து, அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் குறித்த நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதன்படி, குறித்த மருந்து வகைகளின் தரம் தொடர்பில் ஆராய்வதற்காக உணவு ஔடத ஆயுர்வேத திணைக்களம் மற்றும் உள்நாட்டு வைத்திய தேசிய சபை ஆகியன நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன.

தனிமைப்படுத்தல் நிலையங்கள், இராணுவத்தினர் மற்றும் கடற்படையினருக்கு இந்த மருந்து வகைகள் வழங்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.(ஜ-4)

# 37 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 37 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

முகக்கவசம்அணியாமை மற்றும் சமூக இடை வெளியைப் பேணாமை ஆகிய தனிமைப் படுத்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்படுபவர்கள் எவராயினும் கைது செய்யப்படுவார்கள் எனவும் அஜித் ரோஹண எச்சரிக்கை விடுத்துள்ளார். அதேபோன்று அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# மாற்றியமைக்கப்பட்ட ஒப்பந்தம்

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக கடந்த அரசாங்கத்தின் போது கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தம் நாட்டின் நடைமுறைக்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை துறைமுக ஆணையத்தின் தலைவர் ஜெனரல் தயா ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில்,கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள தீர்மானத்துக்கு துறைமுகத்தின் 23 தொழிற்சங்கங்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தன.

இதற்கமைய நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தின் மூன்றாம் நுழைவாயில் முன்னால் குறித்த தொழிற்சங்கங்களைச் சேர்ந்தவர்கள் மௌனப்போராட்டம்ஒன்றை நடத்தினார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கிறிஸ்துமஸ்

வலது கை கொடுக்கிறது இடது கைக்குத் தெரியக் கூடாது என்று சொல்லுவாங்க. ஆனால் இப்பொழுதெல்லாம் அப்படியா இருக்கு? வலது கை வாங்குவது இடது கைக்குத் தெரிய மாட்டேன் என்கின்றது.

வாழ்நாள் பூராகவும் கொடுக்கின்றது யார் என்பது தெரியாமல் கொடுத்துவிட்டுப் போன பெரியவர் ஒருவர் இருக்கின்றார்.

ஹங்கேரி என்று ஒரு நாடு இருக்கின்றதல்லவா, அங்கே ஒரு பாதிரியார் இருந்தார்.கி.பி. 4வது நூற்றாண்டிலே அவர் வாழ்ந்து வந்தார். சான்ரா கிளாஸ் என்று அவருக்குப் பெயர். அவருக்கு மிகவும் இளகிய மனது-தயாள குணம்.

அவர் என்ன செய்வார் தெரியுமா?

தினமும் நடு இரவில் கிளம்புவார். ஏழை எளியவர்கள் வீடுகளுக்கெல்லாம் போவார். அவர்கள் அவர்கள் தகுதிக்குத் தகுந்த மாதிரி சில பொற்காசுகளை அவர்கள் வீட்டு வாசற்படி பக்கத்திலே வைத்துவிட்டு வந்துவிடுவார். இவர் இப்படி வைத்துவிட்டு வருவது யாருக்கும் தெரியாது.

காலையில் அந்த வீட்டுக்காரர்கள் கதவை திறக்கின்றபொழுது இந்த பொற்காசுகள் அவர்கள் கண்ணிலே படும். உடனே அவர்கள் எல்லாம் ஆச்சரியப்பட்டுப் போவார்கள். யாரு இப்படி காசு வைத்துவிட்டுப் போகின்றார்கள் என்ற விபரம் கடைசி வரைக்கும் அவர்களுக்குத் தெரியவில்லை. இந்த விடயம் ஒரு பெரிய மர்மமாகவே இருந்துகொண்டிருந்தது. ஊருபூராகவும் ஒரே பெரிய பரபரப்பாக போய்விட்டது.

இது யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வீடு யார் இப்படி காசு வைத்துவிட்டுப் போவது என்கின்ற உண்மையைக் கண்டுபிடிக்கணும் என்று பல பேர் முயற்சி செய்தார்கள். யாராலும் அதைக் கண்டு பிடிக்க முடியவில்லை. இப்படியெல்லாம் இருந்தாலும் கூட அதற்குப்பின்பும் அந்த பாதிரியார் அவர் வேலையை நிறுத்தவில்லை .யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வீடு போய் காசு வைத்துக் கொண்டு தான் இருந்தார்.

அப்பேற்பட்ட பெரியவர் திடீர் என்று ஒரு நாள் இறந்து போனார்.அதன்பின்பு தான், இதுவரைக்கும் இப்படி காசு வைத்துக் கொண்டு வந்தது இந்தப் பெரியவர் என்கின்ற விபரம் எல்லோருக்கும் தெரிய வந்தது. அதிலேயிருந்து அவரை ஒரு தெய்வமாகவே நினைத்து எல்லோரும் கொண்டாட ஆரம்பித்துவிட்டார்கள். அந்தப்பாதிரியாருடைய பேர்..நிக்கோலஸ் தான். இருந்தாலும் அவரை எல்லோரும் செயின்ட் நிகோலஸ் என்று குறிப்பிட ஆரம்பித்தார்கள்.எல்லோருக்கும் பொற்காசுகளை கொடுத்துவிட்டு வந்தாலே அவரைக் கடவுள் அருள் பெற்றவராகவே நினைத்து அப்படி குறிப்பிட்டார்கள். செயின்ட் நிகோலஸ் என்கின்ற பெயர் காலப்போக்கிலே மருவி எல்லோரும் சுலபமாக உச்சரிக்கக் கூடிய வகையில் சாண்ட்ராகிளாஸ் என்று ஆகிவிட்டது. இப்பொழுதும் அதே பெயர் தான் இருந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவில் இந்தியானா என்கின்ற நகரத்திலே உள்ள சாண்ட்ரா கிளாஸ் என்கின்ற பூங்காவிலே இந்தப் பாதிரியார் நினைவாக ஒரு பெரிய சிலை வைத்திருக்கின்றார்களாம். 22 அடி உயரம். 40 தொன் எடை. இது மாதிரி வேறு எங்கேயும் இவருக்கு சிலை இருப்பதாகத் தெரியவில்லை.

இரவிலே டிசெம்பர் 25 ம் திகதி சின்னப் பிள்ளைகள் எல்லாம் அவர்களோடு புது உடை, விளையாட்டுப் பொருட்கள் எல்லாவற்றையும் ஒரு பையில் போட்டுக் கட்டி,அவர்கள் படுக்கைக்குப் பக்கத்திலே வைத்திருப்பார்கள். இன்றைக்கு காலையில் எழுந்தவுடனே இந்தப் பையை பிரித்து உள்ளே இருக்கின்ற பொருட்களை வணங்கிவிட்டு தான் படுக்கையை விட்டு நகர்த்திபிருப்பார்கள். சாண்ட்ராகிளாஸ் பாதிரியார் நடு இரவிலே வந்து இதையெல்லாம் பரிசாக கொடுக்கின்றதாக ஒரு நம்பிக்கை.முதலிலே சின்ன பிள்ளைகளுக்குத் தான் பரிசு வழங்குகின்ற பழக்கம் ஏற்பட்டது. பின்பு தான் பெரியவர்களுக்கும் பரிசு கொடுக்கின்ற பழக்கம் வந்தது.இங்கிலாந்து ராஜா முதலாவது எட்வர்ட் பிரான்ஸ் நாட்டு ராஜாவுக்கு ஒரு கிறிஸ்துமஸ் பரிசு கொடுத்தார். அது என்ன தெரியுமா? ஒரு பெரிய யானை..

அதுவரைக்கும் இங்கிலாந்து ஜனங்களுக்கு யானை என்றால் எப்படி இருக்கும் என்றே தெரியாது. யானையை அவர்கள் பார்த்ததில்லையாம். அதனால் மக்கள் பல இடங்களிலிருந்து கூட்டங்கூட்டமாக வந்து அதை வேடிக்கை பார்க்க ஆரம்பித்துவிட்டார்களாம்.

ஜேம்ஸ் என்கின்ற ராஜா காலத்திலே, ஸ்பெயின் நாட்டு அரசன் ஒரு யானையுடன் 5 ஒட்டகங்களையும் சேர்த்து கிறிஸ்துமஸ் பரிசாக இங்கிலாந்துக்கு அனுப்பினார்களாம்.

மயிலைக் கூட பரிசாக கொடுத்திருக்கின்றார்கள்.

இப்பொழுதெல்லாம் வாழ்த்துக் கார்ட் அனுப்பிக் கொள்வது அதிகமாக பழக்கத்திற்கு வந்துவிட்டது. இப்படியெல்லாம் இயேசுநாதர் பிறந்த நாளை கொண்டாடுகின்றது எதற்காக? சமாதானம்-அன்பு-மனித நேயம் இதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண் டும் என்பதற்காகத் தான்.


மனித நேயத்துக்கெல்லாம் இப்பொழுது மிகவும் பஞ்சம் ஏற்பட்டுப் போய்விட்டது சேர். இரண்டு நண்பர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். ஒருத்தர் சொன்னார். நான் நிறைய பாவம் செய்து இருக்கின்றேன். அதனால் நரகத்திற்குத் தான் போவேன் என்றார். உடனே அவருடைய நண்பர் அப்படியென்றால் நானும் உங்களுடன் கூட நரகத்திற்கு வந்துவிடுவேன் என்றார். இதைக் கேட்டதும் அவருக்கு அன்பு மிகுதியாலே ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது.

நட்பு என்றால் இப்படியல்லவா இருக்க வேண்டும் என்று நினைத்தார்.ஏன் அப்படி சொல்கின்றீர்கள்.என்னுடனேயே நரகத்திற்கு வந்துவிடுவேன் என்று. அதற்கு அந்த ஆள் நரகத்திலே மனிதனை எண்ணெய் கொப்பறையில் போடுவார்களாமே அது எப்படி இருக்கும் என்று பார்ப்பதற்கு ஆசையாக இருக்கின்றது. அது தான் உங்களை எப்படி போடுகின்றார்கள் என்று பார்க்கலாமே என்று ஆசைப்பட்டு அப்படி சொன்னேன் என்றார்.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

23

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



அதனைத் தொடர்ந்து நடந்த செயற் குழு கூட்டத்தின் போது 20 ஆவது திருத்த சட்டமூலத்தில் இருக்கும் அனைத்து சரத்துக்களும் ஒவ்வொன்றாக ஆராய்ந்து திருத்தங்கள் இருப்பின் அதனை தெரிவிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அதன்போது இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டவர் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முடியும் என்று ஒரு சரத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. அதற்கு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சி வேண்டுகோள் விடுத்திருந்தது. இதன்போது 157 பேர் ஆதரவாகவும் 64 பேர் எதிராகவும் வாக்களித்திருந்தனர். குறித்த சரத்துக்கு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.எம்.எம். முஷாரப் ஆதரவாக வாக்களித்ததால் ஆதரவான வாக்கு எண்ணிக்கை 157 ஆகியது.

இறுதியில் அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த சட்டமூலம் மீதான 3 ஆவது வாசிப்புக்கு ஆதரவாக 156 வாக்குகளும் எதிராக 65 வாக்குகளும் கிடைத்தன. அதன் பின்னர் சபை நடவடிக்கைகள் யாவும் அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டது. இதன்மூலம் இச் சட்டமூலம் அரசியலமைப்பாக அங்கீகரிக்கப்பட்டதாக கருதப்படுகின்றது. இறுதியாக சபாநாயகர் அரசியலமைப்பிற்கு கையொப்பமிட்டபின் அது சட்டமாக மாறும்.

இதன் பிரகாரம் ஒக்டோபர் மாதம் 22 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட, 20 ஆம் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன 29 ஆம் திகதி கையொப்பமிட்டார். அந்த சட்டம் ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி முதல் அமுலாகும் என அறிவிக்கப்பட்டது. .

**நிறைவேற்றப்பட்ட 20 வது திருத்தத்தை உறுதிப் படுத்தும் வகையில் சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தை இட்டு சான்றரைப்படுத்தல் - 2020-10.29**



### பாராளுமன்ற விவாதங்களின் விதிகள் விதிகளின் முக்கியத்துவம் என்ன?

பாராளுமன்றத்தின் முறையான செயற்பாடுகளுக்கு வகை செய்யும் முகமாக விதிகளும் நடைமுறைகளும் உருவாக்கப்பட்டுப் பின்பற்றப்படுகின்றன. இவ்விதிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் சபையில் விவாதங்களின் தரத்தை உயர்த்த முடியும். சட்டங்களை நிறைவேற்றுவதிலும், வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தை அங்கீகரிப்பதிலும் ஏனைய விடயங்களிலும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்ற விவாதங்களில் பங்குபற்ற வேண்டியிருக்கின்றது. பாராளுமன்ற முறைமையில், சபையில் எல்லா நோக்குகளும் கருத்துக்களும் எண்ணங்களும் கருத்துப் படிவங்களும் ஓர் ஒழுங்குக் கிரமத்தில் எழுப்பப்படுகின்றன. அதன் பின்னர் ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய முடிவுகள் எட்டப்படுகின்றன.

### பாராளுமன்றத்தில் உரையாற்றும் உறுப்பினர்களுக்கான விதிகள் எவை?

பேசும் உறுப்பினர் எப்போதும் சபாநாயகரையே விளிக்க வேண்டும். அவர் பேசும்போது எழுந்து நிற்க வேண்டும். (குறிப்பு- அண்மையில், 2020-11-16 ஆம் திகதி நிதி அமைச்சர், பிரதமர் வரவு-செலவு திட்டம் வாசிக்கும் போது சபையின் அனுமதியுடன் ஆசனத்தில் இருந்து வாசித்தார்). உறுப்பினர்கள் தொடர்பற்ற விடயங்களைப் பேசுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கூறியதை கூறலில் ஈடுபடக்கூடாது என அவர்கள் வேண்டிக் கொள்ளப்படுகிறார்கள். உறுப்பினர்கள் முறையற்ற நோக்கங்களை மற்ற உறுப்பினர்கள் மீது சாட்டக்கூடாது. நீதிமன்ற விசாரணையில் உள்ள விடயங்களைப் பற்றியும் பேசக்கூடாது. எந்தப் பிரேரணை மீதும் அல்லது சட்டமூலம் மீதும் பிரேரணை பிரேரித்தவரைத் தவிர்ந்த மற்ற உறுப்பினர்கள் ஒரு தடவைக்கு மேல் பேச அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால், சபையின் குழுநிலையில் ஓர் உறுப்பினர் ஒரு தடவைக்கு மேல் பேச அனுமதிக்கப்படலாம். அத்துடன் பாதிக்கப்பட்ட



உறுப்பினர் ஒருவர் சபையில் அதற்கான பிரேரணை இல்லாத விடத்தும் தனிப்பட்ட விளக்கத்தைச் செய்ய உரித்துடையவராயிருக்கிறார். ஆனாலும் இந்த விளக்கங்களிலே விவாதங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. பாராளுமன்றத்திற்கு ஒவ்வாத வார்த்தைகளைப் பாவியாது இருப்பதற்கு உறுப்பினர்கள் விசேட கவனம் எடுக்க வேண்டும்.

### ஊரையாற்றாத உறுப்பினர்களுக்கான விதிகள் எவை?

உறுப்பினர்கள் கண்ணியமான முறையில் சபையில் பிரவேசிப்பதுடன், அவசியமில்லாமல் சபையைக் கடக்கவும் கூடாது. சபையின் உள்ளே புதினப் பத்திரிகைகள், புத்தகங்கள், கடிதங்கள் என்பனவற்றை வாசிக்க அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் அமைதியாக இருப்பதுடன் சபையில் உரையாற்றிக் கொண்டிருப்பவர் வழி விட்டாலொழிய அவரைக் குழப்பவும் கூடாது. சபையில் புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் தங்கள் வாதங்களை விளக்கிக் காட்டப் பல்வேறு பொருட்களையும் கொண்டு வர முடியாது. கையடக்கத் தொலைபேசிகளும் ஒலிப்பதிவு உபகரணங்களும் உயோகிப்பது சபையினுள் அனுமதிக் கப்படமாட்டா.

### விவாதங்கள் தொடர்பான சபாநாயகரின் அதிகாரங்கள் யாவை?

இழிவான அல்லது வெறுக்கத்தக்க குறிப்புக்களை வாபஸ் பெறுமாறு உறுப்பினரை சபாநாயகர் கேட்கலாம். விரும்பத்தகாத சொற்களை அதிகாரபூர்வப் பதிவுகளிலிருந்து (ஹன்சாட்) நீக்கவும் சபாநாயகரால் முடியும். சபை நடவடிக்கைகளைக் குழப்புவதில் அல்லது தடையேற்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபடும் உறுப்பினரை அவர் எச்சரிக்கலாம். குழப்பும் உறுப்பினரை சபையிலிருந்து அகற்றும்படி படைக்கலச் சேவிதரைக் கேட்டுக் கொள்ளலாம் அல்லது பெயர் குறிப்பிடலாம். ஓர் உறுப்பினர் சில வாரங்களுக்குச் சபையிலிருந்து தடுத்து வைக்கப்படலாம். ஓர் உறுப்பினருடைய நடத்தை முற்றும் ஒழுங்கீனமானதாக இருந்தால் சபாநாயகர் அவரை நாளின் மிகுதியான அமர்வில் பங்குபற்றாது தடை செய்து பாராளுமன்றத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு கட்டளையிடலாம்.

### உரையாற்றுவோரின் நிரலைத் தயாரிப்பவர் யார்?

அரசாங்க மற்றும் எதிர்க் கட்சி முதற்கோலாசான்களே உரையாற்றுவோரின் நிரல்களைத் தயாரிப்பதற்குப் பொறுப்பாக இருக்கின்றார்கள். இந்த நிரல்கள் முன்னதாகவே சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுச் சபாநாயகர் அந்த உறுப்பினர்களைச் சபையில் பேசும்படி அழைப்பார்.

### ஒழுங்குப் பிரச்சினைகள் என்றால் என்ன?

சபை நடவடிக்கைகளில் ஒழுங்கு மீறப்பட்டதாக ஓர் உறுப்பினர் உணர்ந்தால், அவ்விடயத்தை அவர் அவ்வப்போது எழுப்ப முடியும். ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்படும்போது சபையில் உரையாற்றிக் கொண்டிருப்பவர் அவருக்கு இடமளிக்க வேண்டும். சபாநாயகரோ தலைமை தாங்கும் உறுப்பினரோ தன் முடிவை அறிவித்த பின்னர் உறுப்பினர் தமது பேச்சை மீண்டும் ஆரம்பிக்கலாம்.

### வாக்கெடுப்புக்குப் பின்னர் ஓர் உறுப்பினர் பேச முடியுமா?


விவாதத்தின் இறுதியிலே உறுப்பினர்கள் தங்கள் சம்மதத்தை அல்லது எதிர்ப்பை "ஆம்" அல்லது "இல்லை" என்று சொல்வதன் மூலம் வெளிப்படுத்துகிறார்கள். ஓர் உறுப்பினர் வாய் மூலம் முடிவு தெரிவிப்பில் திருப்தி கொள்ளாது விடின் வாக்கெடுப்பைக் கோரலாம். வாக்கெடுப்பானது நிரை நிரையாக சார்பானவர்களையும் எதிரானவர்களையும் எண்ணுவதன் மூலமோ அல்லது அவர்களின் பெயர்களை அழைத்து அவர்களின் விருப்பைப் பதிவு செய்வதன் மூலமோ நடத்தப்படலாம். எந்த வழியில் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிப்பது சபாநாயகரைப் பொறுத்தது.

### கூட்ட நடப்பெண் என்றால் என்ன?

கூட்ட நடப்பெண்ணானது தலைமைதாங்கும் உறுப்பினர் உட்பட இருபது உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(தொடரும்...)

# கொரோனா உயர் ஆபத்தில் இரத்தினபுரி



(இரத்தினபுரி)

கொரோனா வைரஸ் தொற்று அதிகளவு பரவுகின்றமையினால் இரத்தினபுரி நகரம் மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளதாக சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இரத்தினபுரி மாவட்ட பணிக்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இரத்தினபுரி - குடுகல்வத்த பகுதியில் 20 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் 7 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் இங்குள்ள ஆபத்து என்னவென்றால், இவர்கள் அனைவரும் எழுமாற்றாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாவர்.

தற்போதைய ஆபத்து நிலைமை தீர்க்கப்படும் வரை இரத்தினபுரி பகுதியில் போக்குவரத்தை கட்டுப்படுத்துமாறு சுகாதார அதிகாரிகள் மக்களை வலியுறுத்தியுள்ளனர்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# ஆலய வழிபாடு ஏன் - எதற்கு - எப்படி



## தேங்காய் உடைப்பது ஏன்?

வினைகள் நீங்கினால் நாம் தூய்மை பெறுவோம். வினை எனப்படும் நீரை வெளியேற்றி மனப் பக்குவமான தேங்காயை இறைவனுக்கு படைக்கிறோம்.

இறைவனுக்கு தேங்காய், பழம் நைவேத்தியம் செய்யும் போது தவறாமல் வெற்றிலை பாக்கும் சேர்த்து வைத்து படைக்க வேண்டும். இதற்கும் ஒரு தத்துவம் உள்ளது.

ஆணவம் இல்லாத தூயமனம் எனும் தேங்காயையும் மாசற்ற அன்பு எனும் வாழைப்பழத்தையும் இறைவா நான் உன்னிடம் சமர்ப்பிக்கிறேன், நீ எனக்கு உனது அருள் எனும் வெற்றிலைப் பாக்கைத் தந்தருள வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

தேங்காயை எப்படி எச்சில் படுத்த முடியாததோ அதேபோல வாழைப்பழத்தையும் எச்சில் படுத்த முடியாது. அதனால் இறைவழிபாட்டின்போது வாழைப்பழம் முக்கிய பங்கு வகிக்கிறது. முக்கனிகளான மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் ஆகியவற்றில் மாம்பழம், பலாப்பழம் இரண்டிலும் பழத்தைச் சாப்பிட்டுவிட்டு கொட்டையை ஊன்றினால் அவை முளைக்கும். ஆனால் வாழைப்பழம் மீண்டும் முளைப்பதில்லை.

இது பிறவி இல்லாத நிலையான முக்தியைக் குறிக்கிறது. எனவே இறைவனிடம் மீண்டும் பிறவாத நிலை வேண்டும் என்பதை உணர்த்தவே நைவேத்தியம் படைக்கும் போது வாழைப்பழத்தையும் சேர்த்து படைக்கிறோம்.

தேங்காய், பழம் படைக்கும் போது வெற்றிலை, பாக்கும் நிச்சயம் பெற வேண்டும். ஏனெனில் இறைவனுக்கு எத்தனை பதார்த்தங்கள் நிவேதனம் செய்தாலும் வெற்றிலை, பாக்கு வைக்காவிட்டால் அந்நிவேதனம் முற்றுப்பெறுவது இல்லை என்பார்கள்.

வெற்றிலையின் நுனியில் லட்சுமியும் நடுவில் சரஸ்வதியும் காம்பில் பார்வதி தேவியும் இருப்பதாக ஐதீகம். எனவே வெற்றிலை, பாக்கு வைத்து வழிபட்டால் குடும்பம் செழிக்கும் என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளனர்.

வெற்றிலை எப்போதும் நமக்கு வெற்றி தர வல்லது. ஆகையால் வீட்டுக்குள் வெற்றிலையை வாட விடக் கூடாது என்பார்கள்.

ஆலயங்களில் வெற்றிலையைக் கொடுக்கும் போதும் வாங்கும்போதும் வலது கையால் செய்தல் வேண்டும். ஒருவர் வெற்றிலையை எடுப்பதில் இருந்து அவர்களது குணத்தை அறிவதை நம் முன்னோர்கள் கண்டுபிடித்து வைத்திருந்தனர்.

தேங்காய், பழம், நைவேத்தியம் செய்வது கடந்த 1500 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழர்களிடம் வழக்கத்தில் உள்ளது.

சில கோவில்களில் ஆடு, கோழி, பன்றி பலியிடுவார்கள். பிறகு அதையே நைவேத்தியமாக கடவுளுக்குப் படைப்பார்கள்.

தேவி மகாத்மியத்தில் மாமிசங்களை நைவேத்தியமாக படைப்பது பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதனால் தான் அது இன்றளவும் பழக்கத்தில் உள்ளது. அதற்காகப் பெரிய படையல் போட்டு இறைவனுக்கு நைவேத்தியம் செய்தால் தான் இறைவன் நமக்கு அருள்வார் என்று நினைக்கக்கூடாது. எல்லோராலும் எல்லா வகை நைவேத்தியங்களையும் செய்துவிட முடியாது.

சிலர் பணத்தைத் தண்ணீராக செலவு செய்து நைவேத்தியம் படைப்பார்கள். சிலர் தேங்காய், பழத்துடன் திருப்திப் பட்டுக் கொள்வார்கள். இறைவனுக்கு நைவேத்தியம் படைப்பதில் எவ்வளவு செலவு செய்கிறோம் என்பது முக்கியமல்ல. ஆண்டவனை வணங்க உதிரிப் பூவும் தண்ணீரும் இருந்தாலே போதும். சிறிது பூவைத்தூவி படத்துக்குக் கீழ் லேசாக தண்ணீரை தெளித்தாலே போதும். இறைவன் நமது நைவேத்தியத்தை ஏற்றுக் கொள்வார்.

இறைவன் நமது மனதைத்தான் விரும்புவார். எனவே நம் மனதை இறைவனிடம் சரண் அடையச் செய்வதே ஈடு இணையற்ற நைவேத்தியம் ஆகும். இறைவனுக்கு நைவேத்தியம் செய்து முடித்ததும் தீப ஆராதனை காட்டப்படும். அது பற்றி அடுத்து காணலாம். (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 205 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 205 இலங்கையர்கள், நேற்று வெள்ளிக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இதற்கமைய கட்டாரிலிருந்து 163 பேரும் ஜப்பானிலிருந்து 42 பேரும் வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாகக் கட்டுநாயக்க விமான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (ஜ-4)

## படைப்புழுவைக் கட்டுப்படுத்த கிருமிநாசினி அறிமுகம்

(கொழும்பு)

சோளப் பயிர்ச் செய்கையை சேதப்படுத்தும் சேனா படைப்புழுவை கட்டுப்படுத்துவதற்கு என்.ஜி.வி எனும் கிருமிநாசினி அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி எம்.டபிள்யூ.எம்.வீரகோன் தெரிவித்துள்ளார்.

ஒன்றரை வருடங்களாக மேற்கொண்ட ஆய்வு நடவடிக்கைகளின் பின்னர் இந்த கிருமிநாசினி கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக அவர் கூறினார்.

பெரும்போகத்தில் ஒரு லட்சம் ஹெக்டேயருக்கும் மேற்பட்ட பரப்பில் சோளப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மொனராகலை, அம்பாறை, அநுராதபுரம், அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் அதிகளவில் சோளச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

படைப்புழு தாக்கத்தினால் பாதிக்கப்பட்டிருக்கும், காப்புறுதியாளர்களுக்கு நட்டஈடு வழங்கப்படவுள்ளதுடன், சேதமடைந்த பயிர்களை மதிப்பீடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக விவசாயப் பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டார். (ஜ-4)

## மாணவர்களின் மனு ஒத்தி வைப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட இசட் புள்ளிக்கமைய பொறியியல் மற்றும் பௌதீக விஞ்ஞான பீடங்களுக்கு மாணவர்களை இணைத்துக்கொள்வதை இடைநிறுத்துமாறு அறிவித்து இடைக்கால தடையுத்தரவை பிறப்பிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் மீதான மேலதிக பரிசீலனை நாளை மறுதினம் 21 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் பரீட்சைக்கு தோற்றிய 42 மாணவர்களால் உயர் நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே எஸ்.துரைராஜா மற்றும் யசந்த கோத்தாகொட ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான இசட் புள்ளியில் பழைய மற்றும் புதிய பாடத்திட்டங்களுக்கான புள்ளிப்பட்டியலில் பாரிய வித்தியாசம் காணப்படுவதாகவும் இதனால் தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாகவும் மனுவினூடாக நீதிமன்றத்திற்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனால் புதிய மற்றும் பழைய பாடத்திட்டத்திற்கு அமைய உரிய இசட் புள்ளிகளை வெளியிடுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட வேண்டும் என உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## களுத்துறையில் 2568 தொற்றாளர்கள்

(களுத்துறை)

களுத்துறை மாவட்டத்தில் 15 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் நேற்று முன்தினம் வரை 2 ஆயிரத்து 568 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இவர்களில் 729 கொரோனா தொற்றாளர்கள் பண்டாரகமை பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பண்டாரகமை அட்டலுமை பிரதேசத்தில் அதிகளவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ஜ-4)



# சிறுவர் அரங்கம்

## ஒரு நல்ல செய்தி



ஊரில் ஒரு வழக்கம் உண்டு. யாராவது ஒருவர் நல்ல செய்தியொன்றைச் சொன்னால், அதற்காக அவர்களுக்கு பணம் வசூலித்து அன்பளிப்பாகக் கொடுப்பார்கள்.

அந்த வழக்கம் ஒரு விதமான மூடநம்பிக்கை என்பது முல்லாவின் கருத்து.

அந்த மக்களுக்குப் புத்தி கற்பிக்க வேண்டும் என்று முல்லா கருதினார்.

ஒருநாள் அவர் சந்தை கூடும் இடத்தில் மக்கள் நடமாட்டம் அதிகம் இருந்த ஓர் இடத்தில் நின்று கொண்டு, "அன்பார்ந்த பொதுமக்களே! உங்களுக்குச் சொல்வதற்காக அருமையான நல்ல செய்தி ஒன்றை வைத்திருக்கிறேன்.

எனக்குப் பரிசு தருவதற்காக உடனே பணம் வசூலியுங்கள் " என்று கூச்சல் போட்டார்.

முல்லா ஒரு செய்தியினைச் சொல்லுகிறார் என்றால் உண்மையிலேயே அது நல்ல செய்தியாகத்தான் இருக்கும் என்று நம்பிய மக்கள் அவசர அவசரமாக பணம் வசூலித்து ஒரு கணிசமான தொகையை முல்லாவிடம் கொடுத்தனர்.

அந்த அன்பளிப்புத் தொகையை வாங்கி எண்ணி சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்ட முல்லா மக்களை நோக்கி, "அன்பார்ந்த பொது மக்களே நான் கூற இருக்கும் நல்ல செய்தி இது தான். இந்த முல்லா ஒரு மகனுக்குத் தந்தையாகியிருக்கிறார்", என்று கூறிவிட்டு வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தார்.

**நீதி: மூட நம்பிக்கையை வளர்க்கக்கூடாது.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?



அலெக்சாண்டரின் படைவீரர்கள்

முதலில் அலக்சாண்டர் குதிரைப்படைகளைப் பார்வையிட்டார். அவர் கண்களால் பார்வையிட்டும். நாம் வார்த்தைகளால் பார்வையிடலாம் அலெக்சாண்டரின் ஒவ்வொரு படைப்பிரிவாக.

அலெக்சாண்டரின் படையிலிருந்த குதிரைகள் அத்தனையும் மிகப் பெரிய யுத்தங்களை சந்தித்தவை.

கொள்ளைக் காட்டிலும் அதிகமாக வெற்றியைச் சாப்பிட்ட குதிரைகள்.

உண்மையில் அலக்சாண்டரைவிடக் கூடுதலான யுத்தங்களில் பங்கெடுத்தவை அவை.

அலெக்சாண்டரின் பலம் எது என்று கேட்டால் குதிரைப்படைகள் என்று எதிரிகள் கூட சொல்லிவிடுவார்கள். அந்தளவுக்கு குதிரைப் படைகளை வைத்து எதிரிகளின் படைகளை சூறையாடியிருக்கின்றார். சின்னாபின்னமாக்கியிருக்கின்றார்.

மன்னர் பிலிப்பின் பலமும் இது தான். உண்மையில் அவருடைய காலத்தில் தான் குதிரைப்படைக்கும் பலம் சேர்க்கப்பட்டது.

சத்தான உணவுகள் குதிரைகளுக்கு வழங்கப்பட்டன. பளபள மேனி. பளிங்கு போன்ற கற்கள்.

தேவதைகளுக்கு இருக்கும் கூந்தலைப் போன்ற வால். தேக்கு மரத்தைப் போன்ற உறுதிமிக்க கால்கள். கூர் பாய்ச்சப்பட்ட கத்தி போல குளம்புகள்.

அலெக்சாண்டருக்கு பலம் குதிரைகள் என்றால், குதிரையின் பலம் அதன் கால்களிலும் குளம்புகளிலும் தான். பக்குவமாக லாடம் அடித்து, குதிரைகளை எப்போதும் யுத்தத்திற்குத் தயாராகவே வைத்திருந்தார்கள்.

குதிரைகளைப் போருக்குத் தயார் செய்வதற்காக நிறைய நேரம் செலவளித்தார்கள். கூட்டத்தைப் பார்த்து மிரளக் கூடாது என்பது தான் குதிரைகளுக்கு வழங்கப்பட்ட முதல் பயிற்சி.

இதற்காக ஜனத்திரளுக்கு இடையே, ஆயுதமேந்திய வீரர்களுக்கு இடையே என்று வெவ்வேறு சூழ்நிலைகளில் குதிரைகளுக்குப் பயிற்சி தரப்பட்டன. (தொடரும்)

மண்ணாசை கொண்டு மண்ணை ஆண்ட மன்னவர் எல்லோரும் மடிந்து மண்ணாகி விடுவதை நீ அறிவாய். இருந்தும் நீ ஏன் மண்ணாசை கொண்டு அலைகிறாய்? – வள்ளலார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கொரோனா பயத்தில் பொதுமக்கள் இருக்க...

கொரோனாத் தொற்று மிகப்பெரும் அச்சுறுத்தலாக இருப்பது யாவரும் அறிந்ததே.

எங்கு பார்த்தாலும் கொரோனாத் தொற்றுப் பரவிய கதையே பேசுபொருளாகியுள்ளது.

எத்தனை பேருக்கு பிசிஆர் பரிசோதனை பொசிற்றிவ் என்ற கேள்வியோடு நித்திரை விட்டு எழுகின்ற அளவுக்கு எங்கள் வாழ்க்கை வந்துவிட்டது.

நிலைமை இதுவாக இருக்கையில், கொரோனாத் தொற்றுப் பயத்தில் நாம் இருக்க, அதனைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகின்றவர்களும் இருக்கவே செய்கின்றனர்.

பொது சுகாதாரப் பரிசோதகர்போல நடித்து கொள்ளையடிக்க முயற்சித்ததான தகவல்களும் போதைவஸ்து கடத்தல் சம்பவங்களும் நாம் அறிந்தவையே.

இதில் இன்னொரு விடயமும் நடப்பதான தகவல்களும் வெளியாகியுள்ளன.

அதாவது கொரோனா பயத்தில் மக்கள் நடமாட்டம் குறைந்திருக்கின்ற வேளையில், காணி அபகரிப்பு நடவடிக்கையில் தொல்லியல் திணைக்களம் ஈடுபட்டுள்ளதான செய்திகள் வெளிவந்திருப்பது அதிர்ச்சி தருவதாகும்.

குறிப்பாக முல்லைத்தீவில் 72 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட நாகசோலை என்ற காணியை தொல்லியல் திணைக்களம் தனக்குரித்தாக்குகின்ற நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதான தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

இத்தகவல் முல்லைத்தீவில் மட்டுமன்றி தமிழ் மக்கள் மத்தியில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கொரோனா நோய்ப் பயத்தில் மக்கள் உறைந்து போயிருக்க,

தொல்லியல் சான்று உள்ளதாகக்கூறி, காணி அபகரிப்பில் ஈடுபடுவதென்பது அடிப்படை நியாயமற்ற செயல் என்பதை அனைவரும் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

தவிர, தமிழர் பகுதிகளில் பௌத்த விகாரைகளின் எச்சங்கள், அடையாளங்கள் இருப்பதாகக் கூறி அந்த இடங்கள் தமக்குரியவை என தொல்லியல் திணைக்களம் அடையாளப்படுத்துவது ஒருபுறம் இருக்க,

மறுபுறத்தில் பௌத்த விகாரைகளை அமைக்கின்ற முயற்சியில் பௌத்த பிக்குகள் ஈடுபட்டுள்ளனர்.

இதற்கு முல்லைத்தீவு செம்மலை நீராவியடி நல்லதோர் உதாரணம்.

பௌத்த எச்சங்கள் இருப்பதாகக் கூறி அங்கு பௌத்த சிங்களவர்கள் வாழ்ந்ததாக வரலாற்றை புனைந்தருளுவோர்; இலங்கையில் தமிழ்ப் பௌத்தர்கள் வாழ்ந்த வரலாற்றை அடியோடு மூடி மறைத்து விடுகின்றமைதான் ஆச்சரியமான உண்மை.

கௌதம புத்தபிரான் ஓர் இந்து. அவர் உரைத்த தத்துவங்கள் இந்து தர்மத்தின் மூலவேரை அடிப்படையாகக் கொண்டவை.

ஆக, கௌதம புத்தபிரானின் தத்துவங்களின்பால் ஈர்க்கப்பட்ட தமிழர்கள் ஒரு காலத்தில் நம் மண்ணில் இருந்தனர் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

எனவே தமிழர் தாயகத்தில் பௌத்த எச்சங்கள் ஏதேனும் இருக்குமாயின் அவை தமிழர்களினுடையவையேயன்றி வேறில்லை என்பதைப் புரிந்து கொள்வது அவசியமாகும்.

## 2021 ஆம் ஆண்டுக்கான பாதீட்டில் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த முன்னுரிமை

### பசில் ராஜபக்ச தெரிவிப்பு

(கொழும்பு)

கோவிட்-19 தொற்று நிலைமை காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு 2021 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக பொருளாதார புத்தெழுச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் பாதையை தீர்மானிக்கும் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தினூடாக உள்நாட்டு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒரு மாதத்திற்கு 100 கோடி ரூபாய் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார்.

பதுளை ஊவா பல்கலைக்கழகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்நாட்டு பொருளாதாரத்தை மேம்படுத்தக்கூடிய திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன் ஒரு கிராமத்திற்கு அவ்வாறான ஒரு திட்டத்தையேனும் செயற்படுத்துவது அனைவரதும் பொறுப்பாகும் என்றும் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து தெரிவித்த பசில் ராஜபக்ஷ,

கிராமப்புற தேவைகளுக்காக இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தை பொறுப்பேற்கும் போது இருந்த பொருளாதார நிலை போன்றே, கோவிட் தொற்று நிலை காரணமாக முகங்கொடுக்க நேரிட்ட நிதி நெருக்கடிகள் தொடர்பிலும் நீங்கள் அறிவீர்கள். இன்று சுற்றுலாத்துறை வர்த்தகம் வீழ்ச்சியடைந்துள்ளது.

வெளிநாட்டில் தொழில் புரிபவர்களிடமிருந்து மாத்திரமே வெளிநாட்டு பணம் எமக்கு கிடைத்தது. நவம்பர் மாதமளவில் அதில் 34 வீத வளர்ச்சி ஏற்பட்டது. எதிர்காலத்தில் புதிய சந்தை வாய்ப்புகளை இனங்காண்பது போன்றே திறமையான தொழிலாளர்களுக்கு அந்த வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் அந்நிய செலாவணியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்போம். வெளிநாட்டு நன்கொடைகள் மற்றும் கடன்களை வழங்கும் பல நாடுகள் இன்று கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமையால் வெளிநாட்டு நன்கொடைகளும் கிடைப்பதில்லை. அதேவேளை அரசாங்கத்தின் கடன் பெறும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து வேம்படி சந்தி வரை, தபால் பெட்டி சந்தி, கந்தர்மடம் சந்தி, இலுப்பையடி சந்தி, சிவன் அம்மன் வீதி, அன்ன சத்திர வீதி, ஆரியகுளம் சந்தி, அம்மன் வீதி கந்தர்மடம், நாவலர் வீதியில் புகையிரத கடவையிலிருந்து அம்பலவாணர் வீதி ஆத்தியடி வரை, பலாலி வீதி பருத்தித்துறை வீதியிலிருந்து வீரமாகாளி கோவில் வரை, ஆரியகுளம் சந்தியிலிருந்து இராசாவின் தோட்ட சந்தி வரை, கம்பஸ் லேன், தின்னவேலி புறப்பர்ட்டி டெவலப்பர்ஸ் பிறைவேற் லிமிற்ரெட், பலாலி வீதி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக **Graduate Studies**, நொதேர்ண் சென்றல் கொஸ்பிற்றல், **Bright Inn, AVN OR** பிறைவேற் லிமிற்ரெட், டம்றோ பலாலி வீதி, யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடம், பரமேஸ்வராக் கல்லூரி ஒழுங்கை - சிவதாஸ் கட்டடத்தொகுதி, யாழ்.பல்கலைக்கழகம், இயற்கை விஞ்ஞான பீடம், விஞ்ஞானபீடம், இராமநாதன் வீதியில் புகையிரதக்கடவைவரை, நல்லூர் ஒரு பகுதி, றியோ ஐஸ் கிறீம், கைலாசப் பிள்ளையார் கோவில் பிரதேசம், வைமன் வீதி, நாவலர் வீதியின் ஒரு பகுதி, நாவலர் வீதி இராசாவின் தோட்டம் வீதி வரை, அரசடி பழம் வீதி, இந்து மகளிர் கல்லூரி, பிரிட்டிஷ் கவுன்சில், றக்கா வீதியிலிருந்து கோவில் வீதி வரை, றக்கா வீதி சுண்டுக்குழி, TCT மண்டபம், முழவை, பலாலி வீதியில் திருநெல்வேலி சந்தியிலிருந்து பரமேஸ்வரா சந்தி வரை, திருநெல்வேலி சந்தை, பனிக்கர் லேன், திண்ணை விடுதி, தலங்காவில் பிள்ளையார் கோவில் பிரதேசம், திருநெல்வேலி கொமர்ஷல் வங்கி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** புதியசின்னக்குளம் கிராமத்திலும்

**மன்னார் பிரதேசத்தில்** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தலைமன்னார் கடற்படைமுகாம், தலைமன்னார் **Palmyrah house**, கூல்மென் ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ்தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, வங்காலை ஐஸ் தொழிற் சாலை, **Palmyrah house** கரைசல், எருக்கலம் பிட்டி நீர்ப்பாசன சபை, **New Silk Road**, தோட்ட வெளி, **Timex** ஆடைத் தொழிற்சாலை, **Industri al Estate**, மன்னார் வைத்தியசாலை, ஆவேமரியா ஐஸ் தொழிற்சாலை, கீரி ஐஸ் தொழிற்சாலை, இலங்கை போக்கு வரத்துச் சபை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், அரசாங்க அதிபர் அலுவலகம், பூட்சிற்றி, மாந்தை உப்பு உற்பத்தி நிலையம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### சுறுசுறுப்பாகத் திகழுங்கள்

❖ நெம்முடைய உடலையும், அறிவையும், ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிட வேண்டும்.

❖ பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதுபற்றி பேசக்கூடாது. அப்படிச் செய்வதனால் நீங்கள் அவனுக்கு கேடு செய்வதுடன், உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

❖ தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான், அவனே உலகில் நன்றாக வாழ தகுதியுள்ளவன்.

❖ எதிலும் பரபரப்பு தேவையில்லை, ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை.

❖ கீழ்ப்படிதல், முயற்சியுடைமை, செயலாக்கம் ஆகிய மூன்றும் இருந்தால், ஒருவன் வெற்றி பெற்று முன்னேறுவதை எதனாலும் தடுக்க முடியாது.

❖ உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும்சாதித்தவர்கள் உங்களையும் என்னையும் போன்று மனிதர்களே. வீரம் மட்டுமிருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும்.

❖ இயந்திரங்கள் மனித சமூகத்திற்கு சுகத்தைக் கொடுத்தவையுமல்ல, கொடுக்கப் போவதுமில்லை.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—224

# வருமுன் காத்தல் மிக அவசியம் கொரோனாவோடு விளையாடாதீர்கள்!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


அவசியம் கருதி இக்கட்டுரையை விரைந்து எழுத வேண்டியிருந்தது. நாம் தற்போது அல்லல்பட்டுக் கொண்டிருக்கும் நோயானது எமக்கான இடர் காலத்திலொன்று. எமக்குரிய சுய கட்டுப்பாட்டை நாமே கவனிக்க வேண்டியதும் அதனுடன் இணைந்து மருத்துவ உலகம் அடிக்கடி கூறிக்கொள்ளும் கட்டுப்பாடுகளுக்கு நாம் தலைவணங்குவதும் அவசியமானதாகும். "உன்னைத் திருத்திக் கொள் சமூகம் தானாகவே திருந்தும்" என்பதும் "உன்னை தற்காத்துக்கொள் சமூகம் தன்னை தற்காத்துக் கொள்ளும்" என்பதற்கும் நிறையவே பொருத்தப்பாடுகள் உண்டு. உலகளாவிய ரீதியில் வளர்ந்த நாடுகளே சமாளிக்க முடியாமல் அல்லல்படும் போது எமது நாட்டில் நாம் எம்மாத்திரம்? இருப்பினும் சிறந்த அரச நிர்வாகக் கட்டமைப்பினாலும் மருத்துவ துறையின் அளப்பரிய தொண்டினாலும் பாதுகாப்புப் படைகளின் அர்ப்பணிப்பினாலும் கொரோனா வைரஸின் தாக்கம் இந்தளவில் கட்டுப்பாட்டில் இருக்கின்றது என்றால் மிகையாகாது.

இருப்பினும் மக்களின் பொறுப்பற்ற தன்மையினால் ஆங்காங்கே இவ்வைரஸ் பரவலடைய தொடங்கி பலருக்கு தொற்றினை ஏற்படுத்தியுள்ளது. நாம் தற்போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். எமது கவனயீனமான செய்கையினால் எமக்கும் தொற்றினை ஏற்படுத்தி எமது குடும்பத்திற்கும் மற்றையவர்களுக்கும் பரப்பிவிடுகின்றோம். இது சமூக அக்கறையின் பால் எமது நடமாட்டத்தை குறைத்து மற்றையவர்களுடன் நேரடியாகப் தொட்டுப் பழகுவதனை தவிர்த்து பொது இடங்களில் மிகவும் கவனமாக தொடுதல் மற்றும் முகமூடியின்றி அல்லது முகமூடியை சரிவர அணியாமல் இருப்பதனை தவிர்த்து சுகாதாரத்துறையின் முழுமையான அறிவுரைகளை அனைவரும் பின்பற்றி தொற்று மேலும் பரவாமல் காத்திடல் வேண்டும்.

**நடமாடுதலை குறைத்துக்கொள்ளல்**

வெளி மாவட்டங்களுக்கு சென்று வருவதனை கட்டுப்படுத்தல் அவசியம். அதிலும் தொற்று நோயுள்ள பிரதேசங்களுக்கு சென்று வருவதனை இயன்றளவுக்கு தவிர்த்துக் கொள்ளல் அவசியம். வெளி மாவட்டத்திலிருந்து வருகை தருபவர்கள் விடயத்தில் அவதானமாக இருப்பது எம்மை நாமே காப்பாற்றிக் கொள்வதற்கும் அவர்களை தேவையற்று தனிமைப்படுத்தி அவர்களுக்கு மனவுளைச்சலைக் கொடுக்காமல் காப்பாற்றிக் கொள்வதற்கும்சமமானது. அதற்காக அனைவரையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பது தேவையற்றது.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 307




**மரக்கறி வகைகள், மீன், முட்டை, இறைச்சி விற்பனை**

அவசியமான அன்றாடம் தேவையான மரக்கறி வகைகளை அதற்கேயுரிய முறையில் தொற்று ஏற்படா வண்ணம் விற்பனை செய்வதும் வாங்குவதும் நல்லது. பொருட்களை விற்கும் போதும் வாங்கும் போதும் அதிகளவில் கைகளை வைத்து அளையாமல் வலக் கைக்கு கையுறை அணிந்து பொருட்களை அதன்மூலம் தொட்டு விற்பது மிகவும் நல்லது. நோயுற்ற ஒருவர் மரக்கறி விற்பனை செய்தால் அவர் கைகளினால் தொட்டு விற்பனை செய்யும் போது வைரஸ் கிருமி இலகுவில் மற்றையவர்களுக்கு தொற்றுதல் ஆகிவிடும். நோய்க்கான அறிகுறிகளைக் கண்ட ஒருவர் சமூக அக்கறை கருதி அவற்றை எடுத்துச் சென்று விற்பது ஆபத்தாகிவிடும். இயன்றளவிற்கு வாங்கிய பொருட்களை சுடுதண்ணீரினுள் முக்கி எடுத்தால் வைரஸ் தொற்று பரவுவதனை தவிர்க்கக் கூடியதாயிருக்கும். வாங்கிய பின்பு சவர்க்கார நுரையில் முழுவதுமாக கைகளைக் கழுவலாம். பாத்திரங்களையும் மேலும் பயன்படுத்தும் மீளப் பாவிக்கக் கூடிய பொருட்களையும் சவர்க்கார நுரையில் கழுவி சுத்தமாக வைத்திருக்கலாம். மேலும் மீன், இறைச்சி, முட்டை என்பனவற்றை சுத்தமான பைகளில் வாங்குவது நல்லது. இன்னும் பொருட்கள் வாங்குவதற்குப் பயன்படுத்தும் சொப்பிங் பைகளை மீளப்பயன்படுத்தாமல் அவற்றை எரித்து விடுவது அவற்றினூடாக தொற்றுதல் பரவாமல் தடுக்க உதவும். தொடுகையும் சுவாசித்தலும் வைரஸின் தொற்று உடலுக்குள் செல்வதற்கு காரணமாக காணப்படுவதனால் அவற்றை நீங்கள் தடுப்பதுடன் வீட்டிலுள்ள மற்றும் நண்பர்கள் உறவினர்களுக்கும் எடுத்துச் சொல்லுங்கள். அடிக்கடி சுடுதண்ணீர் பருகுவதும் உப்புநீரில் வாயைக் கொப்பளிப்பதும் அவசியமாக செய்ய வேண்டியவைகளாகும்.

**பொதுப் போக்குவரத்து வசதிகளைத் தவிர்ப்பது நல்லது**

போக்குவரத்துக்காக பொது போக்குவரத்து வசதிகளை இயன்றளவு தவிர்த்துக்கொள்ளலாம். தனிப்பட்ட வாகனங்களில் சென்று வருவது தொற்று ஏற்படாமல் காப்பதற்கு உதவும். நெருக்கியடித்துக்கொண்டு பொது போக்குவரத்து வாகனங்களில் செல்வது மிகவும் ஆபத்தானது என்பதனை இப்போது நீங்கள் உணர்ந்திருப்பீர்கள. இயன்ற வரை மற்றையவர்களுடன் நேரடிதொடுகை மூலமான தொடர்புகளை தவிர்த்துக் கொண்டால் அனைவருக்கும் நன்மை செய்வதாக இருக்கும்.

**கொரோனாவும் மனவுளைச்சலும்**

கொரோனாவினால் சமூக மட்டத்தில், குடும்ப மட்டத்தில் என பலர் மனவுளைச்சலுக்கு உள்ளாகியிருக்கின்றனர். வெறுமனே தொற்றுதல் ஏற்பட்டுள்ளது என வீணான கதைகளைக் கட்டி விடுதல் நல்லதல்ல. பி.சி.ஆர்.பரிசோதனை செய்து அதன் முடிவுகளை வைத்துக் கொண்டே கொரோனாத்தொற்று ஏற்பட்டிருக்கின்றதா? அல்லது இல்லையா? என தீர்மானிக்க முடியுமாதலால் நாமாக அனுமானித்து தொற்று ஏற்பட முன்னரேயே மற்றையவர்களை தொற்று நோயுள்ளவர்களாகக் காட்ட முயற்சிப்பது நல்ல காரியமாகாது. இன்று மற்றையவர்களுக்கு, நாளை எமக்கு என்பதனை புரிந்து கொள்ளுங்கள். கொரோனாத் தொற்று நாமாக விரும்பி ஏற்றுக்கொள்வதல்ல என்பதனால் அனைவரையும் புரிந்து நடந்து கொள்வது இத்தருணத்தில் முக்கியமானதாகும். கொரோனாத் தொற்றுள்ளவர்களை தீண்டத்தகாதவர்களாக நடத்துவது மனித குலத்திற்கு இழிவான செயலாகும். அவர்களாக தொற்றுதலை ஏற்படுத்தாத நிலையில் அவர்களை தீண்டத்தகாதவர்களாக காண்பதும் பார்ப்பதும் அவ்வாறு நடத்துவதும் இழிசெயலாகும். எமது குடும்பத்தில் எமக்கு வேண்டியவர்களுக்குத் தொற்றுதல் ஏற்பட்டால் நாம் இவ்வாறு நடந்து கொள்வோமா? என்பதனை முதலில் புரிந்து கொள்ளல் அவசியமாகும்.

தற்போது வடமாகாணத்திலுள்ள சந்தைகளை தற்காலிகமாக மூடியிருக்கின்றார்கள். விவசாயப் பெருமக்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை அந்தந்தப் பகுதி நுகர்வோர் கடைகளுக்கு விநியோகம் செய்து மக்கள் வாங்குவதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இதில்கடைகளின் உரிமையாளர்களும் விவசாயப் பெருமக்களும் இணைந்து இந்த சேவையை மக்களுக்கு அவரவர் இடங்களிலேயே வழங்கலாம். வைரஸ் தொற்று என அறிவிக்கப்பட்ட இடங்களை இயன்றளவு தவிர்த்து மற்றைய இடங்களில் மொபைல் தொலைநுட்பத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு உணவுப் பொருட்கள் கிடைக்க வழி செய்து கொடுத்தல் அவசியமானதாகும்.

உற்பத்திப் பொருட்களை மக்கள் பெறுவதற்கு மொபைல் தொலைபேசியின் வசதிகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். கொரோனா என தனிமைப்படுத்தியவர்களுக்கும் அவர்களுக்கான உணவுப்பொருட்கள் கிடைக்கத் தக்கதாக வழி செய்து கொடுத்தல் நல்லது. மேலும் இணைய வழி வங்கி கணக்கை இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்கள் பயன்படுத்துவதற்கு ஏற்படுத்திக் கொடுப்பதும் அவர்களுக்கு அந்த கணக்கை ஆரம்பித்து அதனை எவ்வாறு பயன்படுத்துவது என்பதனை சொல்லிக் கொடுப்பதற்கும் பல்கலைக்கழக மாணவர்கள் உதவி செய்யலாம்.

இவ்வாறான இடர்காலத்தில் அனைவரும் அமைதியாக உதவி செய்வதன் மூலம் நாம் இவ்விடரை இணைந்து வெல்லலாம். வாருங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பு மிகமிக அவசியமானதாகும்.

## 45 நாட்களே...

குழந்தை ஒன்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு லேடிரிட்ஜ்வே தேசிய சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே குழந்தை உயிரிழுந்துள்ளது.

நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நிலையிலே வைத்தியசாலையில் குறித்த குழந்தை அனுமதிக்கப்பட்டதாக வும் கொரோனா தொற்றினால் அது உயிரிழுந்துள்ளதாகவும் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது. (ம-3)

## வடக்கு மீனவர்...

வார்த்தை இடம்பெறவுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதற்குரிய முன்னேற்பாடாக வடக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து கடற்றொழிலாளர் சங்கங்கள் உடனான விசேட சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் வடக்கு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் எதிர்வரும் 30ஆம் திகதி இடம்பெறவுள்ள பேச்சுவார்த்தையில் முன்வைக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிலையில், குறித்த கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் கருத்துத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நீண்டகாலமாக வடக்கு மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகையினால் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், கடந்த காலங்களில் அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்காவிட்டாலும் தற்போதுள்ள அரசாங்கத்தினால் ஒரு சந்தர்ப்பம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். (ம-3,33,101)

## மிக வீரியமாக...

ளது.

அதன் தலைமை தொற்று நோயியல் நிபுணர் டாக்டர் சுதத் சமரவீர நேற்று குறித்த எச்சரிக்கையை விடுத்தார்.

கொரோனா பரவுவதை கருத்தில் கொண்டு வரும் வாரம் முக்கியமானது. இதன் விளைவாக மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்என்று கூறினார். (ம-3)

## 800 வருட...

வாய்ப்புள்ளதாக வானியல் நிபுணர் அனுரசி பெரேரா தெரிவித்துள்ளார்.

800 வருடங்களுக்கு ஒரு தடவையே இவ்வாறு கிரகங்கள் ஒன்று சேர்கின்றன. இது மிகவும் அரிய சந்தர்ப்பமாகும். மாலை 6.45 மணியளவில் இதன் உச்ச நிலையை அவதானிக்க முடியும்.

இதன்படி இன்று வியாழன் மற்றும் சனி ஆகிய கிரகங்களே இவ்வாறு ஒன்று சேரவுள்ளன.

இதனை வெற்றுக் கண்களால் பார்க்க முடியும். அதேபோல், தொலைநோக்கி ஊடாகவும் பார்க்கலாம் என அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## கோவிட் - 19...

னர் என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெள்ளிக்கிழமை இரவு அறிவித்துள்ளது.

இதன்மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 165ஆக உயர்வடைந்துள்ளது.

50 தொடக்கம் 86 வயதுடையவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், நாட்டில் நேற்று வெள்ளிக்கிழமை +660 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஜனவரி மாதம் முதல் நேற்று வரை 36 ஆயிரத்து 47 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ம-3)

## திருநெல்வேலி...

கொத்தணியினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 77ஆக அதிகரித்துள்ளது.

"மருதனார்மடம் சந்தி கடைத் தொகுதியில் உள்ள வியாபார நிலையத்தில் பணியாற்றும் உரும்பிராயைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.

திருநெல்வேலி சந்தையில் கடந்த இரு நாட்களுக்கு முன் பிசிஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டபோது, அவர் சந்தையில் இருந்ததால் அவரது மாதிரியும் பெறப்பட்டது.

இந்த நிலையிலேயே திருநெல்வேலி சந்தை வியாபாரிகளுடன் இணைந்த பரிசோதனையில் அவருடைய மாதிரிகளும் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை பிசிஆர் பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது" என்றும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-3,18,33)

## உடுவில் பெண்...

இருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துபீட ஆய்வுகூடத்தில் நேற்று 110 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் 2 பேருக்கு தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## சுன்னாகத்தில்...

பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதன்மூலம்மருதனார்மடம்கொரோனா வைரஸ் கொத்தணியின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 77ஆக அதிகரித்துள்ளது.

நேற்று அடையாளம் காணப்பட்டவர் உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவைச் சேர்ந்த சுன்னாகத்தில் வசிப்பவர் என்று அவர் குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 416 பேரின் மாதிரிகள் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவற்றில் ஒருவருக்கு மட்டுமே தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ம-3,18,33)

## போதைப்பொருள்...

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரியின் பணிப்பில் மருதனார்மடம் சந்தி முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் உள்ள சாரதிகளிடம் கடந்த 9ஆம் திகதி புதன் கிழமை மாதிரிகள் பெறப்பட்டு பிசிஆர் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது.

அந்தப் பரிசோதனையின் முடிவில் மருதனார்மடம் பொதுச் சந்தை வியாபாரியாகவும் முச்சக்கரவண்டி சாரதியாகவும் உள்ள 38 வயதுடைய குடும்பத் தலைவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை கண்டறியப்பட்டது.

அவர் தம்புள்ளை சந்தைக்கும் சென்று வருபவர் என்று தெரிவிக்கப்பட்டதால் சுகாதார அதிகாரிகள் முதலில் அதனால் தொற்று ஏற்படுவதற்கு காரணமாக இருந்திருக்கலாம் என்று ஆராய்ந்தனர்.

எனினும் அவர்களது தொடர் விசாரணையில் கொழும்பிலிருந்து வருகை தரும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மருதனார்மடத்தில் இருந்து முச்சக்கர வண்டியில் யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளுக்கு பயணிப்பதாகத் தெரிய வந்தது.

அதனை உறுதி செய்யும் வகையில் தெல்லிப்பழை கட்டுவனில் இரு நாட்களுக்கு முன் கைது செய்யப்பட்ட 36 வயதுடைய குடும்பப் பெண் 21 கிராம் ஹெரோயினுடன் காங்கேசன்துறை மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் தனது வாக்குமூலத்தில் கொழும்பு ஆமர் வீதியில் வசிக்கும் முச்சக்கரவண்டி சாரதி ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு ஹெரோயினை பேருந்தில் எடுத்து வருவதாகவும் அவர் மருதனார்மடம் சந்தியில் இறங்கி கட்டுவனில் உள்ள தனது வீட்டுக்கு வருவதாகவும் தெரிவித்திருந்தார்.

மருதனார்மடத்தில் இறங்கும் அவர் முச்சக்கரவண்டியிலேயே கட்டுவனுக்குப் பயணித்துள்ளார் என்பது பொலிஸாரின் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

எனினும் பொலிஸார் தொடர்ச்சியான விசாரணைகளை முன்னெடுப்பதற்கு மருதனார்மடம் கொரோனா வைரஸ் தொற்று கொத்தணியுடன் தொடர்புடைய சிலர் கோவிட் - 19 நோய்க்கான சிகிச்சைக்காக கோப்பாய் தேசிய கல்வியற் கல்லூரி சிகிச்சை நிலையத்தில் தங்க வைத்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

அதனால் அவர்கள் வீடு திரும்பியதும் முறையான விசாரணைகளை முன்னெடுக்க பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.(ம-3)

## கொரோனா...

பரவல் இரண்டாவது அலையின் பின் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட் - 19 நோயால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை 100ஆக உயர்வடைந்துள்ளது.

அவர்களில் டிசம்பர் 12ஆம் திகதி கண்டறியப்பட்ட மருதனார்மடம்கொரோனா வைரஸ் கொத்தணியினால் 8 நாட்களில் 77 பேர் கண்டறியப்பட்டுள்ளனர். (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

தன நிதானய
திகதி - 2020.12.18
சீட்டிழுப்பு இலக்கம் - 377
W 31 42 58 69
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 18.12.2020
சீட்டிழுப்பு இலக்கம் 2635
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 18 25 34 61
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2020/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 4340
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 1 1 2 3 3 5
தேசிய லொத்தர் சபை

சுபிரி வாசனா
சீட்டிழுப்பு திகதி 2020/12/18
சீட்டிழுப்பு இலக்கம் 1558
சுப்பர் இலக்கம் 10
வெற்றி இலக்கங்கள் 02 12 37 60
NATIONAL LOTTERIES BOARD

மெகா பவர்
திகதி 18/12/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0707
வெற்றி எழுத்து G
சுப்பர் இலக்கம் 01
வெற்றி இலக்கங்கள் 14 49 57 76

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1136
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 18.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 91,742,975
வெற்றி இலக்கங்கள் 27 28 33 48
ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3466
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 18.12.2020
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 36,582,657
வெற்றி இலக்கங்கள் 12 34 49 75
ஆங்கில எழுத்து Q
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,914,011/=
திகதி: 18.12.2020
வெற்றி வாரம்: 3017
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 28 42 56 60
கும்பம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 93,70,840

SUPER BALL சுப்பர் போல்
சீட்டிழுப்பு வாரம் 1310
சீட்டிழுப்பு திகதி 18/12/2020
நிறம் இளஞ் சிவப்பு
தினம் வெள்ளிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 08 40 45 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் 58,704,068
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

சீட்டிழுப்பு வாரம்: 665
வர்ணம்: பச்சை
திகதி: 18.12.2020
வெள்ளி
K 49 67 73 74
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 77,146,615
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## மேல் மாகாணத்திலிருந்து
# வெளி மாகாணங்களுக்கு பயணித்த ஐந்து பேருக்கு கொரோனா

(கொழும்பு)

மேல் மாகாணத்திலிருந்து வெளி மாகாணங்களுக்கு பயணித்துக்கொண்டிருந்த ஐந்து பேருக்கு கோவிட் தொற்று உறுதியாகியுள்ளது.

மேல் மாகாணத்திலிருந்து வேறு மாகாணங்களுக்கு செல்லும் நபர்களிடம் நேற்றைய தினம் நடத்தப்பட்ட ரெபிட் அன்டிஜன் பரிசோதனையின் மூலம் இவ்வாறு ஐவர் கோவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளமை உறுதியாகியுள்ளது.

கண்டி வீதி, காலி வீதி, அவிசாவளை மற்றும் சிலாபம் ஆகிய பகுதிகளில் எழுமாறாக சிலருக்கு நடத்தப்பட்ட பரிசோதனைகளின் மூலம் கோவிட் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

சுமார் 451 பேரிடம் பரிசோதனை நடத்தப்பட்டதாகவும், இதில் ஐந்து பேர் கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்கள் எனவும் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். (ம-03)

# ஐ.நா பிரதிநிதி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் உயர்மட்ட பிரதிநிதி ஒருவரைச் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டெரெஸ், இலங்கைக்கு அனுப்பவுள்ளார் என இராஜதந்திர வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

ஐ.நாவின் அரசியல் பிரிவு தலைவர் ரோஸ்மேரி ஏ.டிகார்லோ **(Rosemary A. DiCarlo)** 2021 ஜனவரி ஆரம்பத்தில் கொழும்பு வரவுள்ளார் எனத் தெரிய வருகின்றது. (ம-03)

# மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்

(கொழும்பு)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

ஆணைக்குழுவின் புதிய தலைவராக ஜகத் பாலசூரியவும், கலாநிதி எம்.எச். நிமல் கருணாசிரி, கலாநிதி விஜித நாணயக்கார, செல்வி அனுஷியா சண்முகநாதன் மற்றும் எச்.கே. நவரட்ன வேரதுவ ஆகியோர் ஆணைக்குழுவின் புதிய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

1996 டிசம்பர் 10ஆம் திகதி மனித உரிமைகள் சட்டத்தின் படி இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதுவரை காலமாக 2015 ஆம் ஆண்டு முதல் 2020 ஒகஸ்ட் 31 வரை ஆணைக்குழுவின் தலைவராக கலாநிதி தீபிகா உடகம பதவி வகித்தார்.

ஹமீட் ஹசாலி ஹூசைன், ரமணிமுத்தெட்டுவேகம மற்றும் தீபிகா சுபசிங்க ஆகியோர் ஆணையாளர்களாக பதவிவகித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-03)


**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS

UK- 1025 /=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய் ● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(C-848)

**வகுப்பு**

O/L தேர்வில் ஆங்கிலத்தில் வெற்றி பெறுவது உறுதி.
பிரத்தியேக Special Personal Class மற்றும் Zoom Class. (4989)

077 478 7007

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (C-941)

077 436 6704, 077 179 1963

**பசு விற்பனைக்கு**

6 மாத சினையுடன் கூடிய முதலாம் ஈற்று ஜேர்சி இன பசு விற்பனைக்கு உண்டு. (4991)

077 420 6382

**தேவை**

புத்தகங்கள் விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்கள் (ஆண், பெண்) தேவை. பயிற்சி இலவசம், நல்ல சம்பளம் மற்றும் கமிஷன் வழங்கப்படும். (4989)

076 684 1113

**அண்ணா விரைவுப் பொதிகள் சேவை**

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1150/= 5kgக்கு மேல் 11kgக்கு மேல் 21kgக்கு மேல் கட்டணம் குறைவு (C-909)

லண்டன் 1050/= இத்தாலி 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | மல்லாவி


# மரண அறிவித்தல்



## திருமதி மகாதேவி வைரவநாதர்

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவி வைரவநாதர் நேற்று முன்தினம் (17.12.2020) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தையல்முத்து தம்பதியரின் மருமகளும் வைரவநாதரின் (ஓய்வூதியர் ) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பரமநாதன் (முன்னாள் வர்த்தகர்), அருணகிரிநாதன் (சட்டத்தரணி) மற்றும் கனகலிங்கம் (பொறியியலாளர்), சிதம்பரநாதன் (சங்கானை ப.நோ.கூ. சங்க கிளை முகாமையாளர் ), குமரகுரு (ஓய்வுபெற்ற ஆசிரியர்), சிவசுந்தரம் (ஓய்வுநிலை அதிபர்), சிவனருள்தேவி (ஓய்வுநிலை அதிபர் ), குகராசா (கணக்காளர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, ஜெகசிங்கம் (பொறியியலாளர்) மற்றும் கெசலட்சுமி, ஸ்ரீரஞ்சினி, கணேசதேவி, கமலாம்பிகை (ஆசிரியை), இராஜகீதா (ஓய்வூதியர்), கனகம்மா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (18.12.2020) வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெற்றது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (4993)

அராலி மத்தி,
அராலி.

தகவல்:-
கணவன் மற்றும் சகோதரர்கள்






இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.